யிறுவெளியீடு. விலை 0—1—3. REGD. NO. M. 4642

# திராவிடநாடு

மலர் 3. இதழ் 31.

## மொழிப் புரட்சி.

புதுவைச் சிவம்.

1. தமிழ் மொழிக்கு ஊறுசெய்ய
வருமொழியை வீழ்த்துவோம்!
விழுமி நிற்கும் நிலைமொழியை
தமிழொலியால் வாழ்த்துவோம்!

2. தமிழ்மொழிக்குத் தகுதியற்ற
வழுமொழியை வீழ்த்துவோம்!
அமிழ்த முள்ள பழமொழியை
ஆய்ந்தெடுத்து வாழ்த்துவோம்!

3. தமிழ் மொழிக்குச் சிறப்பு நல்க
தமிழை எங்கும் முழக்குவோம்!
தமிழ்க் கழகம் பலஅமைத்து
மொழிவிருந்து வழங்குவோம்!

4. தனிமொழியில் தமிழ் மொழியே
இனிமை என்று போற்றுவோம்!
இனிமையிலும் இளமைகுன்ருக்
குமரிக்குத் தொண்டாற்றுவோம்!!

# திராவிடரும்-கடவுளரும்.

நக்கீரன்.

இஞ்ஞான்றைத் திராவிடமக்கள் சிலரால் வழிபடப்படும் கடவுள் அல்லது கடவுளர், உண்மையாகவே திராவிடரின் கடவுளாகவும், திராவிடமொழிகளில் ஒன்றையாவது தெரிந்தவர்களாகவும் இருந்தால், திராவிடமக்களைக்கொண்டே திராவிட மொழிகளிலேயே தங்களுடைய காரியங்கள் எல்லாம் நடைபெறும்படி செய்திருப்பர். இன்றுங்கூடத் திராவிடநாட்டிலுள்ள கோயில்களில் நடைபெறும் வழிபாடு (பூசை) கள் எல்லாம் ஆரியப்பார்ப்பனரைக்கொண்டே வடமொழியிலேயே நடைபெற்று வருவது கண்கூடு. ஆகையால், வடமொழியைத் தேனெனப்பருகி, ஆரியக் கொள்கையைக் கற்கண்டெனச் சுவைத்துத், தமிழ் மக்களைச் சூத்திரராக்கித் தமிழ்மொழியைத் தமக்கேற்றதல்லவாக்கித், தமிழர் கொள்கைக்கு இடமளியாது நிற்கும் ஒரு கடவுள், அது எத்தகையதாய் இருப்பினுஞ்சரியே, அதனிடம் எத்துணை ஆற்றல் இருப்பினுஞ்சரியே, அதனைத் தனது கடவுள் என்று எந்தத் திராவிடனாவது ஏற்றுக்கொள்வானோ? இனித், திராவிடமக்களுக்கு ஒரு கடவுளும், அவரைக் குறிக்கும் வேதங்கள் திராவிட (தமிழ்) மொழியிலும் இருந்தனவென்றும், ஆனால்அவை ஆரியர் சூழ்ச்சியாலும், ஆடிப்பெருக்காலும் மறைந்தும் அழிந்தும் போயினவென்றும் சிலர் கூறுவரேல், அவர்தம் அக்கூற்று அறிவுடைய மக்களால் அணுவளவும் ஏற்றுக்கொள்ளக்கூடியதன்று என்பேன். ஏனென்றால், அக்கடவுளும் அவர்தம்மைப்பற்றி எழுதப்பட்டவேதங்களும், ஆரியச்சூழ்ச்சியாலும்ஆடிப்பெருக்காலும் அழியக்கூடியனவாய் இருந்தால், அக்கடவுளை எல்லாம்வல்ல முழுமுதற் கடவுள் என்றும், அவர் இலக்கணத்தைக் கூறும் சுவடிகளை முடிந்தமுடிபைக் கூறும் வேதங்கள் என்றும் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? தன்னையும்,தன்னை விளக்கும் நூல்களையும் காப்பாற்றவகையற்ற ஒரு கடவுள், நம்மையும்மற்றும் இவ்வுலகிற் காணப்படும் அனைத்தையும் காப்பாற்றும் ஆற்றல் பெற்றுள்ளதென்பதனைக் கேட்கும், மணற்சோறு பொங்கி மகிழும் சிறுமகாரும் எள்ளிநகைப்பரே!

இனித், திராவிடமக்கட்கு ஒரு கடவுள் உண்டென்று கூறுவோர், மேற்கூறிய [illegible] மடமும் இன்றவிடுவதில்லை. [illegible] போலிக்கொள்கைகளை நிலைநாட்ட [illegible] [illegible] முன்னோக்குகின்றனர். அவர்கள் [illegible]; அவர்களும், சமண-புத்தர் முதல் திராவிட நாட்டிற்கு வந்து தத்தம் மதக்கொள்கைகளை நிலைநாட்டிய காலத்திற்கு மிக முன்பிருந்தே, திராவிட மக்கள், கடவுள் வழிபாட்டையும், அதற்குரிய வேதாகமங்களையும் உடையவர்களாய் இருந்தனரென்றும்; ஆரியச் சூழ்ச்சியாலும் ஆடிப்பெருக்காலும் அவை மறைந்தும் அழிந்தும் போனபின்னர்; திருவள்ளுவர் திருக்குறளையும், சைவசமயாசிரியர்கள் தேவார-திருவாசகங்களையும்; வைணவாசிரியர்கள் பிரபந்தங்களையும் உண்டாக்கிப் பண்டைத் திராவிடரின் கடவுட்கொள்கையை நிலைநாட்டினர் என்றும் கூறுவர்.

இக்கூற்று முழுப் பூசணிக்காயைப் பரிமாறின சோற்றுள் மறைப்பது போன்ற ஒரு பொருந்தாப் பொய்க் கூற்றாம். எப்படியென்றால், வள்ளுவர் வழங்கிய திருக்குறளானது, ஒரு சமயச் சார்புபற்றிய நூல் அல்லவென்பதூஉம், அது, உலமக்கள் அனைவர்க்கும் அறிவை விளக்க எழுந்த ஒரு பொது நூலே என்பதூஉம் அறிஞர் கண்ட முடிபாகும். எனவே, திருக்குறளைச், சைவரோ-வைணவரோ மற்றெந்தச் சமயத்தவரோ, தங்கள் சமய உண்மைகளை விளக்க எழுந்த நூலென்றோ, அல்லது தங்களுக்கன்றிப் பிறர் எவர்க்கும் உரியதாகாதென்று கூறித் தனியுரிமை பாராட்டவோ முடியாது. அது மக்கட் பண்பை விளக்க எழுந்த ஒரு பொதுநூல். ஆனால் அதற்கும், மதவெறி பிடித்தோர் மாசுண்டாக்கி, அதனை மன்பதையின் பொது நூலாக்கிக்கொள்ள இடமில்லாதுசெய்து விட்டனர். என்றாலும், பொன்னின் களிம்பைப்புடம் போட்டு நீக்கமுடிவது போல், திருக்குறளையும் அதன்கண் புகுத்தப்பட்டுள்ள மதமாசைத் துடைத்து அதனை மன்பதையின் பொதுநூலாக்குவது, முயன்றால் முடியாத காரியமன்று. மணிகளிடையே பவளத்தைக் கோர்ப்பதுபோல், அறிவுமணியாகிய திருக்குறளிலே மதக்கொள்கைகள் ஆகிய பவளங்கள் கோர்க்கப்பட்டிருப்பது கலங்கரை விளக்காய்க் காணக்கிடக்கின்றது. அவற்றை நீக்குவது ஆய்தல் உலகத்தில் இன்றிய கற்றறிந்தோரால் மிக எளிதில் முடியக்கூடிய காரியமே.

இனித், தேவார—திருவாசக—நாலாயிரப்பிரபந்தங்கள் எல்லாம், இருக்கு-எசர்-சாமம்-அதர்வம் என்று சொல்லப்படும் ஆரிய வேதங்களை அடிப்படையாகக்கொண்டு உண்டாக்கப்பட்டன என்பதற்குச் சான்றுகள் பலவுள. விரிவஞ்சி ஒன்றைமட்டும் எடுத்துக் காட்டுகின்றேன். அதாவது:—

"வேதம் பசுவதன்பால்
மெய்யாகமநால்வ
ரோதுந்தமிழ் அதனினுள்ளுறு
நெய்—போதமிகு
நெய்யினுறு சுவையாநீள்
வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்"

இப்பாடல், சைவசித்தாந்தத்திற்குத்தாய் நூலாகவுள்ள சிவஞானபோதத்தின்கண், அதன் சிறப்பைக்குறிக்குஞ் செய்யுளாக மிளிர்வது. இப்பாடலின் பொருள் என்னவென்றால், இருக்கு-எசர்-சாமம்-அதர்வம் ஆகிய ஆரிய வேதங்களை ஒரு பசுவாகவும்; அப்பசுவிடத்துண்டாகும் பாலை ஆகமங்களாகவும்; அப்பாலிடத் துண்டாகும் நெய்யைத் தேவார—திருவாசகங்களாகவும்; அந்நெய்யிடத் துண்டாகுஞ் சுவையைச் சிவஞான போதமாகவும் கூறிச்சிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அன்றியும், தேவார-திருவாசக-பிரபந்தங்கள் எல்லாம இருக்கு முதலான ஆரிய வேதங்களை அடிப்படையாகவும், இராமாயண-பாரத இதிகாசங்களை ஆதாரமாகவுங்கொண்டு பாடப்பட்டனவென்பதற்கு அப்பாடல்களிலேயே கணக்கற்ற சான்றுகள் காணக்கிடப்பதோடு, இராமாயண-பாரத இதிகாசங்கள் இல்லையென்றால், தேவார-திருவாசக-பிரபந்தங்களைப் பாடியிருக்கமுடியாதென்ற உண்மையும் அங்கை நெல்லிக்கனியென அறியப்படும். ஆகையால், தேவார-திருவாசக-பிரபந்தங்களைப் பண்டைய தமிழ் வேதாகமங்களின் சாரம் என்று கூறுவது சாரமற்ற கூற்றேயாகும். எனவே, பண்டைத் தமிழ் மக்களுக்கு வேதாகமங்கள் எதுவும் இருந்ததில்லை என்பது போதரும். ஆகவே, அவ்வேதாகமங்களிற் பேசப்பட்டதாகச்சொல்லி, இஞ்ஞான்றைத் தேவார-திருவாசக-பிரபந்தங்களிலும், ஏனைச்சைவ-வைணவநூல்களிலும் கூறப்படும் எந்தக் கடவுளும் பண்டைத் திராவிட மக்களால் வழிபடப்பட்டவை அல்லஎன்பதும்பெறப்படும்.படவே, பண்டைத் திராவிடமக்கள்பால், இவ்வேதாகமங்களுக்குஏற்ற கடவுள் வழிபாடு என்ற ஒரு வேண்டப்படாத—தேவைப்படாத மூடக்கொள்கை இருந்திருக்க முடியாதென்று யாம்கூறும் உண்மை நிலைபெறுதல்காண்க. காணவே, கருத்தழிந்த சிலர், திருக்குறளையும் தேவார-திருவாசக-பிரபந்தங்களையும் பண்டைத் தமிழ் நூற்களின் சாரமென்று கூறுவது சழக்கர் உரையாம் என்றே கருதப்படும்.

இனி, முதல்—இடை—கடை என்று சொல்லப்படும் முப்பெருங் கழக காலங்களில், அக்கழகத்திற்குத் தலைவராய் இருந்த தமிழ்ப்புலவரின் பெயர் "சிவன்" என்பதும், அப்புலவர் அறிவாற்றலிற் சிறந்து விளங்கிய காரணத்தால், அவர் இறந்தபின், அவர் பேரால் நினைவுக்குறிகள் எடுக்கப்பட்டு, ஆண்டுதோறும் நினைவு நாட்கள் தமிழ் மக்களால் கொண்டாடப்

( 11-ம்பக்கம் பார்க்க )

## வருந்துகிறோம்

திடீரென ஏற்பட்ட அச்சுக்கோளாறினால், சென்ற கிழமை, இதழ் வெளிவர முடியவில்லை. சென்ற கிழமை நடைபெற்ற பல ருசிகரமான விஷயங்களைப் பற்றிய விளக்கங்களை உடனுக்குடனே வெளியிட முடியாது போனதற்கு வருந்துகிறோம்.


# திராவிட நாடு.

காஞ்சி 15—10—44 ஞாயிறு


# தாக்குதல் ஆரம்பம்.

"நான் சொல்லுவதே சரி! என்வார்த்தைக்கு எதிர்பேசக்கூடாது, என்ற சித்தாந்தம் கொண்டவராக இருக்கிறீர். நீர் ஜாடை காட்டினதும் கல்லடம் கட்டிக்கொண்டு, என்மீது பாய்ந்து என்னைத் தாக்கப் பலர் தயாராக உள்ளனர். அப்படிப்பட்ட கும்பல் உம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. ஆயினும் என்ன! நான் தூற்றல்கண்டு துயருறேன், தாக்குதல்கண்டு தலைகுனியேன். மனதிற் சரி என்று பட்டதைச்சொல்வேன். எதுசரி என்று கருதுகிறேனோ அதைச் செய்வேன்."

ஜனாப் ஜின்னா, காந்தியாருடன் நடத்திய சமரசப் பேச்சு முறிந்தபோது இது போலக்கூறினார். அவர் கூறினபடியே, காந்தியாரின் கும்பல், இப்போது, ஜனாப் ஜின்னாவின்மீது பாய்ந்துவிட்டது. தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது.

"மீண்டும் சந்திக்கக்கூடும்," என்ற பேச்சுக்கும், இதுபோது நடைபெற்று வரும், தாக்குதலுக்கும், பொருந்துமா என்பது ஒருபுறமிருக்க, இன்று, தாக்குதலை நடத்தும் தோழர்கள், நாட்டின் எதிர்காலத்தைப்பற்றிச் சிறிதேனும் கவலை கொண்டவர்கள்தானா என்ற கேள்வி முன்னணியிலே நிற்கிறது.

காந்தியார் பாகிஸ்தானை எதிர்க்கிறார், என்றால், உடனே கண்ணை மூடிக்கொண்டு பாக்கிஸ்தானைக் கண்டிப்பது, காந்தியார் அதனை ஆதரிக்கிறார் என்றதும், உடனே அவர் மொழிவழி நடப்பது, மீண்டும் அவர் காணம் அடித்தால் தாங்களும் காணமிடுவது, என்ற போக்கைக்கொண்டுள்ள இப்புனிதர்களை பூலோக விசித்திரங்கள் என்றே நாம் கருதுகிறோம். அறிவுக்குத்தளை பூட்டிக்கொண்டு, தலையாட்டிக்கிடக்கும் இவர்களின் தாக்குதலால், ஏற்கனவேதகர்ந்து போயுள்ள "ஒற்றுமை" துண்டு துண்டாகச் சிதறிக்கீழே வீழ்வதன்றி வேறென்ன பலனைக் காணப்போகிறார்கள்.

இப்போது இவர்கள் நடத்தும் தாக்குதலைக் கவனிக்கும்போது, ஒரு இரகசியம் வெளியாகிறது. ஜனாப் ஜின்னாவை பட்டிகண்டு காந்தியார் பேசினதே ஒரு சூட்சிக்காகத்தான். "எங்கள் மாபெருந்தலைவர், மகாத்மா, ஜின்னாவிடம் சென்றுபேசினார், எவ்வளவோவிட்டுக் கொடுத்தார், கட்டிப்பிடித்தார், பாகிஸ்தான் சாரத்தை அளித்தார்; ஆனால் ஜின்னா பிடிவாதம்பேசிக் காரியத்தைக் கெடுத்துவிட்டார், முஸ்லீம்களின் நலனுக்குக்கேடுசெய்துவிட்டார், என்றுகூறுவதற்காகவே, ஒப்புக்குக் காந்தியார் ஜனாப் ஜின்னாவைச் சந்தித்தார் என்று தெரிகிறது. இந்தப்போக்கு, இப்போது காந்தியக்கும்பல்நடத்தும் தாக்குதலால் வெளிப்படுகிறது.

ஆனால், ஒரு முக்கியமான உண்மையை மறந்துவிட்டு இவர்கள், இத்தாக்குதலைத் துவக்கியிருக்கிறார்கள். தாக்குதலால்ஜின்னாவை ஒழித்துவிட்டிருக்கமுடியுமானால் காலஞ்சென்ற மௌலானாவும், பண்டிதர் மாளவியாவும், ராஜாஜியும், பட்டேலும், மற்றும்பலரும் சேர்ந்துநடத்திய தாக்குதலின்போதே, ஜின்னாவை ஒழித்துவிட்டிருக்கமுடியும். அவர்கள் முழுவலிவுடன் நடத்திய தாக்குதல்முறியடிக்கப்பட்ட பிறகுதான், காந்தியார் ஜனாப்ஜின்னாவின் முற்றத்திலே காத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்த உண்மையை உணராமல், மீண்டும் தாக்குதலைத் துவக்குகிறார்கள்! விழிப்புற்ற ஒரு இனத்தின் வீரத்தலைவனை, வீம்புகொண்ட ஒரு கும்பல் வீழ்த்த முடியாது. புயலை அடக்கச்சென்று, புலம்பி வீடுதிரும்பிய புல்லர்போலாவர், காலம் இதனைக்காட்டும்.

# அம்பேத்கார் அறிவுரைகள்.

டாக்டர் அம்பேத்கார், சென்னையிலே பல சொற்பொழிவுகளிலே, தந்த அறிவுரைகளிலே சில பொறுக்குமணிகளைக் கீழே தருகிறோம். உங்கள் குறிப்பிலே இருக்க வேண்டுமென்று.

### பதவிப்பிரியர்கள்.

பிராமணரல்லாதார் கட்சி, தேர்தலிலே தோற்றதற்குக் காரணம், அக்கட்சியிலே பதவிபெறவேண்டுமென்ற நோக்கத்தோடு இருந்தவர்களின் போக்குதான்.

### கட்சி தலைதூக்குகிறது.

பிராமணரல்லாதார் கட்சி மீண்டும் தலைதூக்க ஆரம்பித்திருப்பது கண்டுகளிப்படைகிறேன்.

### காந்தியார் குணம்.

காந்தியார் காங்கிரசின் தலைவராக இருக்கிறார். வேறு எந்த தேசத்தில் அவரைத் தலைவராக ஏற்றுக்கொள்ளுவர்? எதிர்கால திருஷ்டியோ தற்கால திருஷ்டியோ, இவைகளைப் பரிசீலனைசெய்யும் சக்தியோ அவருக்கு இல்லை.

### கொடுமை.

தாழ்த்தப்பட்டவர்களாகிய நாங்கள் சென்ற 2000 வருஷகாலமாகப் பிராமண ஆட்சியால் ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டிருக்கிறோம்.

### காங்கிரஸ்வலை.

தாழ்த்தப்பட்டோரின் உரிமைகளைப் பறிகொடுத்துக் காங்கிரசை வலுக்கச் செய்வதுதான் காந்தியாரின் நோக்கமென்பதை அனுபவத்திலிருந்து அறிந்திருக்கிறேன். வட்டமேஜை மகாநாட்டில் ஜின்னாவிடம்போய் அவருடைய 14 கோரிக்கைகளுக்குத்தாம் இணங்குவதாகவும் அதற்குமாறாக எனக்கு (அம்பேத்காருக்கு) ஜின்னா சலுகைகாட்டக்கூடாதென்றும்கேட்டார். இதற்கு ஆதாரமான தஸ்தாவேஜு என்னிடம் இருக்கிறது. ஆனால் முஸ்லீம் பிரதிநிதிகள் காந்தியாரின் வலையில் அகப்படவில்லை.

### அன்று ஒரு போர்.

புத்தமதத்திற்கும் பிராமணமதத்திற்கும் வெகுநாள் சச்சரவுகள் நடந்தன. கொள்கையில்மட்டுமல்ல; அரசியல் சமூகத்துறைகளிலும் போராடினார்கள்.

### விஷமம்.

நான் வேதங்களைப்படித்திருக்கிறேன். சதுர்வர்ணப்பிரயோகங்களும் மந்திரதந்திரங்களுமே அவைகளில் மலிந்துகிடக்கின்றன. இவைகளைப்போதிக்கும் முறையில் பக்கபலமாக பகவத்கீதையும் மனுஸ்மிருதியையும் உபயோகிக்கிறார்கள். அவைகளில் விஷமத்தைத்தவிற வேறு ஒன்றுமில்லை.

### மதப்பிடி.

இந்த மதசம்வாதம் சுமார் 1500 வருஷங்களுக்குமேலாக நடந்ததாகத்தெரிகிறது. இறுதியில் ராஜதர்மத்தைக் கொலைசெய்து பிற்போக்கான எதிர்ப்புரட்சியான பிராமணமதம் வெற்றிபெற்றது. அந்தப் பிற்போக்கான மதத்தின் பிடியில்தான் நாம் இருக்கிறோம். புத்தமதம் க்ஷீணித்தது நமக்கு ஒரு பெரிய நஷ்டம். அதனால், சமூகசமத்துவமும், அறிவைஉணரும் தத்துவமும் மற்றும்பலவும் ஒழிந்தன.

### அறிவு வழி.

இனியாவது எல்லோரும் அறிவின் வழியே நடக்க முன்வாருங்கள். அறிவுக்குப் பொருத்தமில்லாத்தன்மை, வேதாந்த விவகாரத்திலிருந்து, சமூகத்துறையிலும், பிறகு அரசியல் விஷயத்திலும் புகுந்துவிட்டது. எதிர்காலத்தில் ஜாக்கிரதையாக இருக்கும்படி உங்களை எச்சரிக்கிறேன்.

### ஆணவக் கூட்டம்.

இந்நாட்டிலே பிராமணர்களே ஆளும் கூட்டமாக இருந்துவந்திருக்கிறார்கள். ஜாதிவித்யாசம் பாராட்டி, மனிதனை மனிதன் தொட்டால் தீட்டு என்று அதும் இயல்பினரிடம் காட்டு ஆட்சியிருக்கலாமா? அவர்களைக்கொண்ட தேசீய சர்க்காரால், நமக்கு என்ன பயன்?

# திருவாங்கூர் திவானுக்கு.

★ "ஆணி" ★

திருவாங்கூர் திவான் சர்.சி. பி.இராமசாமி அய்யரே!

அக்டோபர் 3வயன்று மைலாப்பூர் இந்திய இளைஞர் கழகத்தில் தாங்கள் பேசினீர்களாம். "அம்பேத்காருக்கு திவானின் ஆணித்தரமான பதில்" என்று புளுகுமணிப் பிரசுரங்களில் கொட்டை எழுத்துகளில் வெளியானது கண்டு வியந்தேன். தாழ்த்தப்பட்டோரின் தனித் தலைவருக்கு உயர்ந்தோரென்று கூறிக்கொள்ளும் கூட்டத்தில் ஒருவர் பதிலளிப்பதாம்; அதுவும் ஆணித்தரமான பதிலாம்; என்று வியந்து முழு விபரமும் கண்டேன்.

தீக்ஷிதர்களாலும் சாஸ்திரிகளாலும் சூழப்பட்டு பவனிவரும் உமக்கு ஆரியப் பித்தம் இயற்கையிலேயே தலைக்கேறித்தான் இருக்கும், பிறப்பிலேயே புனிதமானகுலத்தவரல்லவா! அன்று நீர் பேசிய பேச்சு சற்றேனும் ஆலோசித்துப்பேசியதாகத் தெரியவில்லை. ஆரியரும், அவர்தம் அடிவருடிகளும், இவ்விருவர் செயலைக்கண்டு அகமகிழும் ஆளுங்கூட்டத்தினரும் அமர்ந்திருந்த அவையிலே, குலப்பெருமையை உயர்த்தியும், குலத்தின் பழக்கங்களைக் குற்றங்காணும் குணாளரைத்தாழ்த்தியும் நீர்பேசியபோது எற்பட்ட (வெறுங்) கரகோஷத்தால் நீர்உற்சாகம் உச்சிக்கேற, உரைப்பதன் உண்மைதானும் உணராமல் உளறிக்கொட்டியிருக்கிறீர்.

உம் இனத்தவர் உம்மைப்பாராட்டியபோதிலும், அறிவுள்ள மனிதர், மேதாவி என்பதற்காக உம்மீது மதிப்பு வைக்கும் பிற இன அன்பர்கள் உம்மீது இரங்கத்தான்வேண்டும். கடுஞ்சொல் கூறுவதாய்க் கோபமுறுதீர்; கோபம் அறிவை மயக்குமே; கைப்பு, நோய்க்கு நல்மருந்துஎன்பதுதாங்கள் அறியாததா?

முதலில் இந்து சமுதாயத்தின் பெருமைகளைப்பற்றிப் பேசியிருக்கிறீர். இந்து மதத்தைக் கொண்டதனால் ஒரு இனத்தாருக்கு அளவற்ற நன்மையும், மற்றொரு பிரிவினருக்குப் பகரவொண்ணாத பழியும் ஏற்பட்டிருப்பது மறுக்கவொண்ணாத விஷயம்.

ஒரு பிரிவினர் உச்சிவேளையிலே நெற்றியினின்று நிலத்தில்விழும் வியர்வையைத்துடைத்தவண்ணம், கடுங்கதிரொளியில் கால்வயிறு கஞ்சியுடன் காலங்கடத்த, அப்பேருழைப்பின் பயனை, மந்தமாருதம்சுந்தரப்பூங்காவிலே வீச வந்தேமாதர வனிதாமணிகளும், சந்தம் வல்லசங்கீதசிரோன்மணிகளும் சூழ, மதியினழகைப்பற்றியும், கம்பனின் கவியின்பத்தைப்பற்றியும், வேதாகமங்களின் விசேஷத்தைப்பற்றியும் தருக்கித்து, உல்லாசப்போதுபோக்கும் வீணர் அடைவது எதனால்? உணவுப் பஞ்சம்மிகுந்த இந்நாளிலும் அர்ச்சகர்களுக்கு அளவற்ற செல்வமும், ஊணும் சேர்வதுதான் எதனால்? வேதம் ஓதும் வித்வமணிகள், "மறைகாணுமுதல்வனை" இசையொடு காணச்சென்று, பசையோடு வீடுதிரும்புவது எதனால்?

பரமன் முகத்துதித்த பிராமணர்களுக்குப் பாதத்துதித்த சூத்திரர்கள் பாதசேவை செய்து பிழைக்கவேண்டுமென்று உங்கள் சமுதாயம் விதித்திருப்பதாலன்றோ! அந்தச் சமுதாயத்தினால் நலம் பெறும் நீர் அதை வாழ்த்தாது வேறென்னசெய்வீர்.

பிறகு அரசாங்க ஊதியம் பெறும் ஒருவர் எவ்வாறு ஒரு சமூகத்தை இகழ்ந்து பேசலாம் என்று கனற்பொறிகண்களில் பறக்கக் கூறுகிறீர். எச்சமுதாயத்தையும் இகழ்ந்து பேசவேண்டுமென்பது அம்பேத்காரின் அகக்கிடக்கையன்று. அவர் தாழ்த்தப்பட்டோர் தலைவர். தாழ்த்தப்பட்டோர் வகுப்பின் நலனுக்கான வழிகளை வகுத்துப் பேசுங்காலை, இடையூறாயிருப்பவைகளை எடுத்துக்காட்டி, தாழ்த்தப்பட்டோர் தன்னுணர்வடைய வேண்டுமென்று சொன்னால் அது தவறாகுமா?

அம்பேத்கார் அரசாங்கஊதியம் பெறுபவர் என்பது உமக்குத் தெரிவதைவிட அம்பேத்காருக்கு அதிகம் தெரியும். அதனால்தான் அவர் அரசாங்கம் நன்கு நடைபெற எந்த இனத்தவரில் நல்வாழ்வு இன்றியமையாததோ—எந்த இனத்தாரைத் தொட்டாலும் பாவம் என்று நீர்உயர்த்திக்கூறும் இந்துநெறி இசைக்கின்றதோ—அந்த இனத்தாரின் ஆக்கத்திற்கான அமைப்பைச் சொன்னார். அதை ஒரு குற்றமாகக்கொண்டு நீர், உம் இனத்தோரின் இயல்புபோல அரசாங்கத்தாரிடம் எந்த அரசாங்கத்தை உமது சமுதாயத்தில் பெரும்பாலோர் வெறுக்கின்றனரோ அந்த அரசாங்கத்தினிடம், எடுத்துக்காட்டும் முறையில் பேசியிருக்கிறீர். ஆனால் சிவன் சிரத்திலுள்ள சிறுநாகம், ஆழிதுயிலும் அரி அமரும் கருடப்புள்ளைக் கண்டு கலப்புரையாடும் என்று உமது புராணங்களை உமக்குப்பகரவில்லையா?

ஒரு சமுதாயத்தினர் உயர் நிலையிலும், மற்றவர் தாழ்நிலையிலும் இருப்பதும், உயர்ந்தவர் தாழ்ந்தவரைக்கஷ்டப்படுத்துவதும்தேசவரலாற்றில் எப்போதும்இருந்தேதீரும் என்று இறுமாந்து இயம்புகிறீர்.

உமது கூற்றுக்கு மேற்கோளாக தென் ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, முதலிய நாடுகளின் முற்கால வரலாற்றைக் காட்டுகிறீர்.

நீர் காட்டும் ஆதாரங்கள்நேர்மையானவையா என்பது ஒருபுறமிருக்க—பிறநாடுகளில் நடந்தது என்பதனாலேயே ஒரு கெட்ட செயல் நல்ல செயலாகிவிடுமா? கள்ளுக்கடையில் கணக்கிலடங்காதோர் கலாம் விளைத்துக்கொண்டிருந்தால், குடிகைக்கொள்ளக்கூடிய நற்பழக்கமாகுமா? சோமபானத்தை ஆரியர் அருந்தி வேதம் பாடினார்கள் என்று திராவிடர் அவர்தம் தீமைகளைக் கூறாமலிருக்க முடியுமா?

இனி, இங்கிலாந்தின் முற்கால யூதர்களின் நிலையைக்கூறும் நீர் அவ்வுபமானத்தின் நேர்மையை நினைத்தீரா? அந்நாட்டு யூதர்களுக்கு ஒப்பிடக்கூடியவர் இந்நாட்டில் ஆரியர்தாம். திராவிடர் உழைக்க ஆரியர் இளைக்கின்றனர். அத்தகைய யூதர்களை மற்றவர்கள் இங்கிலந்தில் நடத்தியது தவறல்ல என்று இந்நாட்டு மக்கள் கருதி விடக்கூடாதென்று முன்யோசனையுள்ள ஆரியர் "அமலனை" அணுகிக் கெஞ்சி நிற்கவேண்டியிருக்க, நீர் இங்கிலந்து வரலாற்றை எடுத்துக்காட்டுதல் பொருந்துமா? மன்னர் ரோமன் காத்தலிக்காக இருக்கலாகாதென்றுள்ள முறையை உரைக்கிறீரே, இந்த வரையறைகளெல்லாம் அந்நாட்டின் மக்களுடைய வாழ்க்கை முறைகளை மாற்றியிருக்கின்றனவா? நால்வருணங்கள் அந்நாட்டில் உளவா? பார்ப்பனன் பறையன் என்ற பிரிவினை அந்நாட்டில் உண்டா? பரலோகவாழ்க்கைக்குப் பசுமாட்டைப் பார்ப்பனன் மூலமாகப் பரமனுக்குப் பரிதானம் வழங்கும் கொள்கை உண்டாவென்று ஆலோசித்தீரா?

திருவாங்கூரில் ஆலயத்திறப்பைப்பற்றி வானளாவப் பேசியிருக்கிறீர். ஆலயத்திற்கு எத்தனை தாழ்த்தப்பட்டோர் வருகின்றனர்? உயர்ந்த உத்தியோகங்களைத் தாழ்த்தப்பட்டவருக்காக 'ஒதுக்குவதும்' பிறகு தகுதியுள்ள "ஆள் கிடைக்காததால்" ஆரியர்களுக்கு அவற்றை அளிப்பதும் நடைமுறையில் இல்லையா?

அன்பரே! காலம் கடுவேகமாகச் சுழல்கிறது! குரங்குப்பிடியாளருக்குக் காலம் இதுவல்ல. பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்,ஒன்றே குலம், திராவிடநாடுதிராவிடருக்கே என்று திட்டங்கொண்டு வரும் தீரர்களின் காலம் இது. இந்து சமயத்தைஇகழ்கிறான் என்று என்னைக் கோபியாதீர். புத்துணர்ச்சியுலகின் கொள்கைகள் உமக்குப் பிடிக்கவில்லை யென்றால் புறம்பாய் ஒதுங்கி நில்லும். திராவிடர் தன்னுணர்வு என்னும் தனிப்பெரும் புயலை எதிர்த்து வீணே வருந்தாதீர்.

## "சந்திரோதயம்"

வடாற்காடு திருப்பத்தூர், கோவை, திண்டுக்கல், கும்பகோணம், ஆகிய ஊர்களிலே, சந்திரோதயம்—நாடகத்தை நடத்தும்படி அன்பழைப்புகள் வந்துள்ளன. ஆனால் நடிகர் கழகத்தோழர்களுக்குள்ள வேலை மிகுதியினால் இரண்டு திங்கள் இப்பணியிலீடுபட முடியாமலிருக்கிறது. அன்பர்கள் மன்னிக்கவும்.

# தீச்சுழலில்.

சென்ற வாரத் தொடர்ச்சி.

களிற்றின் காலில் அகப்பட்ட தேங்காய்போலக், கொடும்பாம்பால் இறுக்கப்பட்டு எலும்பு முறிபடும் காட்டெருமைபோலக், கருங்கல் மாடங்கள்மடமடவெனச் சரிந்தன. பலகல் தொலைவிலிருந்தும் பார்த்து மகிழக்கூடிய சிற்பக் கும்பங்கள் மண்ணில்வீழ்ந்தனபதுமத்தில் நிற்கும் சிங்கங்கள், தாமரை ஏந்திநிற்கும் பெண்வடிவங்கள், யானையால் சுமக்கப் படும் சற்பீடங்கள், ஆசையை ஒழித்து அமைதியில் சூழ்ந்திருக்கும் புத்தரின் உருவங்கள், அவரது வாழ்க்கையை விளக்கும் கல்லோவியங்கள், தீயால் பிளக்கப் பட்டன. புகையால் மயக்குற்று அனலில் வீழ்ந்தோர், கட்டிடத்தால் நசுக்கப்பட்டவர்கள், கற்குவியல்களிடையே மறைந்தோர், எண்ணிறந்தோர். கல்சிதறி கண்ணிழந்தோரும், கருங்கல் விழுந்து காமிழந்தோரும், தப்பி ஓடுகையில் தழலால் சுடப்பட்ட கரிகாலர்களும் பலர். முக்கியமாகப் பல்கலைக் கழகத்தால் பாங்குடன் வளர்க்கப்பட்டு, நலந்தாவிற்குத் தனிச்சிறப்பாக ஏத்தப்பட்டுப்,புத்தகலையின் உயிர்நாயகமாய் ஓம்பப்பட்டுவந்த நூல் நிலையம் தீச்சுழலில் முற்றும் சிக்கியது. அன்று சுடருக்கும், சுவடிக்கும் நடந்த காதல் நாடகத்தைக்கண்டுகளித்த கூட்டந்தான் இன்று சுயமரியாதைக்காரர்களைக் கலைக்கொலைஞர்களெனக்கூறுகிறது. இன்றும் காணலாம் நலந்தாவின் அழிந்த பகுதியை, இன்னும் உலவுகிறது அழிவை உண்டாக்கிய அடுத்துக்கெடுக்கும் கூட்டம். இலக்கியத்திற்கு இன்னல் விளைவித்தவர்கள் சு.ம.க்களா? அன்றி மதவெறி தலைக்கேறிய மதப்பித்தர்களா? என்று நலந்தா நவிலும் தக்க சான்றுகளுடன், வரலாறு வகையுடன் தீட்டும் இப்பகுதி உலகுக்குக் காட்டும் கலையை அழித்த கசடர்களை. அச்சுக்கூடங்கள் இல்லாத அந்த நாளிலே, ஆயிரமாயிரம் ஏடுகளை நெருப்பில்பொசுக்கிப்,பலவாண்டுகளாகப் பண்படுத்தப்பட்டபல்கலைக்கழகத்தை நள்ளிரவில் நயவஞ்சகமாக அழித்தது மதவெறி. முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய், மூடப்பழக்கங்களுக்கு முதலிடமாய் விளங்கும் புராண இதிகாசங்களில் மூன்றை, அச்சுக்கூடங்கள் மிகுந்த இந்நாளிலே வெளிப்படையாக, ஊழலை விளக்க, உரிமையை நிலைநாட்ட, வெறுப்பின் அறிகுறியாக சுயமரியாதைக்காரர்கள் போடுகிறார்கள் தீச்சுழலில்.

அலெக்சாந்திரியா நகரிலிருந்தபெரும் நூல் நிலையத்தை எரிக்கப் புகுந்தவன் இளவேனில் மயக்கத்தால் இழுக்கடைந்தவனல்ல. தான்சென்ற இடங்களிலிருந்த நூல் நிலையங்களை எல்லாம் தீச்சுழலுக்கனுப்பிய மன்னன் கூறினான், "இச்சுவடிகளெல்லாம் எனது வேதப்புத்தகத்திலிருப்பதைக் கூறுவதாயின்இவைகளனைத்தும் பயனில்லாதன. எனது புத்தகத்திலில்லாததைக் கூறுவதாயின் அது கடவுளால் பொறுக்கமுடியாத வெறுப்பான குற்றமாகும்" ஆங்கில மறுமலர்ச்சியின் விடிவெள்ளியெனப்போற்றப்படுபவனான விக்ளிபின் தொண்டர்களாகிய லாலார்டுகள் தீச்சுழலில் தள்ளப்பட்டனரே மதவெறியர்களால். ஆதிமனிதன் ஆதாமும், முதல் மங்கை ஏவாளும் மண்வெட்டியும், நூல்நூற்றும்வாழ்ந்தார்களென்றால், ஏழை பணக்காரன் என்ற வரையறை எப்பொழுது பிறந்தது? எனச் சாடின ஜான்பால் நெருப்புக்குண்டத்தில் நீறாக்கப்படவில்லையா? மேரியின் காலத்தில் தீக்குண்டங்களினருகே குவிக்கப்பட்ட கரித்துண்டுகள் இன்னும் அகற்றப்படவில்லையே. அடிமைத்தளையில் அவதியுற்ற பிரான்சு நாட்டிற்கு விடு

★ செழியன். ★

தலை வாங்கித் தந்த வீரமங்கை ஜோன், கடவுளை மறக்கும் சாத்தானிடம் புகலிடம், எனக் குற்றம் சாட்டப்பட்டு, எரிக்கப்பட்ட இடம் இன்றும் ரூவானில் பிரயாணிகளுக்குச் சுட்டிக்காண்பிக்கப் படுகிறதே. "ஹியுஜினட்களை" எரித்துத் தள்ளப்பிரான்சில்ஆக்கப்பட்ட நெருப்புக் குழிகளிலிருந்து கிளம்பிய புலால் நாற்றம் ஐரோப்பாவெங்கும் வீசவில்லையா? "இன்கியுசிஷன்" பேரால் ஸ்பெயினிலும், இத்தாலியிலும் வெட்டப்பட்ட தீக்குழிகளும், நிலவறைகளும்இன்னும்தூர்க்கப்படவில்லையே! அரசியல் வெறுப்பின் காரணமாக அடக்கு முறையின் உதவியால் ஆக்ஸ்போர்ட்போன்றபெரும் பல்கலைக்கழகங்கள் மில்டன் பாக்டர்ஸ், புக்கனி என்பவர்களின் நூல்களைப்பள்ளிக் கூடங்களில் எரிக்கும்படி உத்தரவிட்டதே. கோள்நிலை அறிந்த கோபர்னிக்ஸ், காவலில் குருடான கலீலியோ, வானநூல் வரைந்த கெப்ளர் இவர்களின் நூல்கள் மதபோதை தலைக்கேறியபோப்பினாலும், ஆண்டவனின் அருள்பெற்ற அடியவர்களாலும் அனுப்பப்படவில்லையா தீச்சுழலுக்கு? இங்ஙனமாக முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய்அறிவு விளக்கத்திற்கு அணையாய் தீச்சுழலைஏவ, மதப்பித்தர்கள் முன்வந்தனரேயன்றி, நாஸ்திகனோ, விஞ்ஞானியோ, முன்னேற்றப்பாதைக்கு மக்களை இழுத்துச் செல்ல முயன்றவனோ, முன்வந்ததாக மேற்கோள் ஒன்றாவது காட்டமுடியுமா?

கண்டனத்தின் அறிகுறி மட்டுமல்ல, நாங்கள் கையில் எடுத்தகனல்பந்தங்கள். வெறுப்பின் விளக்கமென்றாலும், வேறுபல பலன்களை நாங்கள் எதிர்பார்க்கிறோம். நாங்கள் ஏற்றும் தீ மதப்புரட்டுகளை இடுகாட்டிற்கு இழுத்துச்செல்லும். மூடப்பழக்கமெனும் மூர்க்கனின் உடலம் சுடலைக்குச் செல்கிறது, வழிகெடுக்கப் பிடிக்கப்படும் நெய்ப்பந்தங்களே இவைகள், "புராண இதிகாசங்கள் எரியழலில் புகுத்தப்படும்" என்றவுடன் எங்கள் மீது எரிந்துவிழுந்த கூட்டத்தை நாங்கள் அமைதியுடன் வாதுக்கழைத்நேரம், கட்டுரைகள் பல வரையப்பட்டன, கேள்விகள் பல விடுக்கப்பட்டன, வெளியிடப்பட்ட ஆராய்ச்சி முடிவுகள் மறுக்கப்படவில்லை.

இலிங்கவடிவு தோன்றுவதற்குக் காரணமாயிருந்த தாருகாவனத்து முனிவர்கள் அனுப்பிய தீப்பிழம்பைப் பொரி கடலையென ஏந்திய கைலாசனின் கலைச்செல்வங்கள் இலைவள்ளல்களிடமா அடைக்கலம் புகவேண்டும்? ஊழித்தீயை உண்டாக்கும் முழுமுதற்கடவுளின் ஏடுகள் சிறு தீயால் உண்ணப்படுமா? கனல் கிளப்பும் காளிங்கன் மடுவில் குதித்த கண்ணன், தீயில் நின்று ஒற்றைக்காலில் தவஞ்செய்த அருச்சுனன், காண்டகவனத்தை எரித்தக் காண்டிபன், தீயில் தோன்றிய திரௌபதி, அதில் விழுந்தும் இறவாத சீதை, தீயினால் அழிக்கப்படாத அவளது ஆடையணிகள், தீப்பிழம்பாகிய கதிரவனைக் கனியென உண்ட காற்றின்மைந்தன், இலங்கையை வால்நுனித் தீயால் அழித்த வானரம், தீயுமிழும்திருக்குமாரரின் அம்புகள், இவைகள் இப்பொழுது எங்கே? நாத்திகம் பேசி நாத்தழும்பேறி, சுவடியைத் தூக்கிச் சுடரில் எறியும், சுயமரியாதைக்காரர்களை அழிக்கப் பத்மநாபன் பத்தவதாரங்கள் எடுக்க வேண்டியதில்லை; ஆதிசிவன் அறுபத்துநான்கு திருவிளையாடல்கள் புரியவேண்டிய அவசியமில்லை. நினைத்தாலோ, சிரித்தாலோ போதும். அருள்புரிய வந்து வந்து போகும் கடவுளர்கள் அற்புதங்கள் ஏன் நிகழ்த்துவதில்லை? கலிகாலம் என்றவுடன் அவர்களுக்கும் கிலிபிடித்துவிட்டதா? கஜினி மகம்மதுவின் மருதிகளிலுள்ள படிக்கட்டுகளில் அமிழ்ந்து விட்டனவா? 144க்குக் கட்டுப்படும் உற்சவமூர்த்திகள், அரசியலாரின் உத்தரவுக்காக ஆருத்ராதரிசனத்தை ஒத்திப் போடும் ஆடல் வல்லார், பிறர்மனைபுகுந்து மட்டையடி வாங்கும் பெருமான்கள், வேறு வேலைகளில் ஆழ்ந்திருக்கும் உச்சிஷ்ட பிள்ளையார், இவைகளைப்பற்றிச் சுயமரியாதைக்காரன் நன்கு அறிவான்.எல்லாம் வல்ல இறைவன் திருக்கோவில்களுக்கு மதிற்சுவர்களேன்? ஆண்டவனின் ஆடையாபரணங்களை வைக்கப் பெரும் இரும்புப்பெட்டிகள் தேவைதானா? வாசிலே காணப்படும் பெரும் பூட்டுகள் கோவிலின் கனத்த கதவுகளில் தானேதொங்கு

(4ம் பக்கம் பார்க்க)

# தீச்சுழலில்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

கின்றன. 'நான்கு நாட்களிலே நரையை ஒழித்துவிடும் இம்மருந்து' எனக்கூவித் திரிபவனின் தலையில் வெள்ளி மயிர்கள் விளங்குமானல் அவனுடைய மருந்துக்கு யோக்கியதையுண்டா? பத்து நாட்களில் பலசாலியாகும் முறையைக்கண்டுபிடித்தவனின் உடல் எலும்புகூடாக இருக்குமானல், அவனுடைய முறையில் உங்களுக்கு மதிப்புண்டாகுமா? சாய்பாபாவை அணிந்துகொண்டு சாலையில் செல்ல அஞ்சும் சாமிநாத முதலியார், புதையலெடுத்துத் தருவதாகக் கூறிக்கொண்டு புளித்தபழையதுக்கு அலையும் போகானந்த சுவாமிகள், மறைந்துபோன மாட்டிற்காக ஊரூராய் அலையும் மந்திரவாதி, வீட்டில் நடந்த திருட்டை வெளியாக்க சிவப்புத் தொப்பியருக்குச்சிரம் தாழ்த்தும் மன்னார்சாமி, பில்லி சூன்னியத்தில் கைத்தேர்ந்த பெருமாள் பண்டாரம் இவர்களைவிட., நமது கடவுள்கள் எவ்விதத்தில் உயர்ந்துவிட்டார்கள்? தீச்சுழலில் கடவுளர் செய்த திருவிளையாடல்களைவிட, அடியார்கள் அனலில் செய்த அற்புதங்கள் மிகப்பெரிதானவை. நீற்றறையில் தள்ளப்பட்ட அப்பர், வெந்துபோகாது வெளி வந்ததைப் படிக்கும்பொழுது அவர் தற்காலத்தில் கோயில்களில் காட்டப்படும் கல்லாகத்தான் அன்று இருந்தாரோ என்று ஐயுறவேண்டியிருக்கிறது. திருநீறு தீட்டப்பட்ட திருநாவுக்கரசரைக்கண்டதும் வெப்பமிகுந்த அந்த நீற்றறையானது இளவேனில்,தைத்தென்றல், நீர்த்தடம், வெண்ணிலவு, யாழொலி, ஐயர் திருவடி நிழல், இவைகளைப்போன்று குளிர்ந்திருந்ததாம், மதுரையில் சம்பந்தர்தங்கியிருந்த மடத்திற்குச் சமணர் தீ வைக்கப் பையவே சென்று பாண்டியர்க்காகென அத்தீயைப் பணித்தாராம் சம்பந்தர். 'பையவே' என்பதில் நயங்காணும் மெய்யன்பர்கள் உள்ளத்தில் இன்று ஏன்பயங் காணவேண்டும்? தங்கள் தங்கள் ஏட்டிற்குள்ள மகிமையைவெளிப்படுத்தச் சமணரும் சம்பந்தரும், அனல் வாதத்தில் இறங்கினர்கள். சமணர் இட்ட ஏடு எரிந்து சாம்பலாகவும், சம்பந்தர் இட்ட ஏடு எரியாது நின்றதாம். அனல் வாதத்தில் வென்ற சம்பந்தர்தான் நாகையில் தன்னை வாதுக்கழைத்த புத்தர்கள் தலையிலிடி விழச்செய்தாராம். எந்த நாகையில் முழுநீறு பூசிய முனிவர் வெற்றி கொண்டாரோ, அதே நாகையில்தான் தொண்டர் சீர் பரப்பும் வாரியார் திண்டாடுகிறார். சிவனடியார்கள் முகத்தில் நகையொலி உண்டாக்கிய நாகைஇன்று அவர்களுக்கு நடுக்கத்தைக்கொடுக்கிறது. நந்தனரைப்போலவே, புகழ்ச்சோழரும் தீயில் புகுந்து இறைவன் திருவடி நிழல் எய்தினர். எண்ணெய் அகப்படாக்குறையால் வருந்திய நமிநந்தியடிகள் அகலில் நீரைவார்த்துத், திருவிளக்கேற்றினராம், அவ்விளக்கும் விடியுமளவும் நின்றெரிந்ததாம். மற்றொரு பெரியபுராண அரிச்சந்திரர் கலியர் என்பவர், இவரும் திருவிளக்கேற்றுவதில் திருவையெல்லாந் தொலைத்து, வறுமையடைந்த காலத்து தம் மனைவியை விற்க முன்வந்தார். அவ்வூரார் காசிவாசிகள்போன்ற கயவர் அல்லர்போலும். மனைவியை வாங்குவாரின்மையின் மனந்திகைத்து நிற்கையில், விளக்கு அணையும் சமயம் வந்தது. எண்ணெய்க்குப் பதிலாக உதிரத்தைக்கொடுக்க வெண்ணி கொடுவாளால் கழுத்தை அறுக்க, கண்ணுதற் பெருமானும் கையைப்பிடித்துக் கருணை புரிந்தார். திருப்புலீச்சரத்திலிருந்த கணம்புல்லர் விளக்கேற்றுவதில் பொருளையெல்லாம் புகையாக்கி ஒழித்துவறுமையடைந்தார்.இருந்தாலும் விளக்கேற்றுவதிலிருந்து விலகவில்லையாம். இறுதியில் தம் திருமுடியை விளக்கெரிக்க நீட்டினர். இவ்விதமாகத் தீச்சுழலில் அற்புதங்களும்,அபத்தங்களும் நிகழ்த்திய தொண்டர்களின் புராணம் இன்று தீச்சுழலில் வைக்கப்படுகிறது. பெரியபுராணம் வரலாற்று ஏடா? அன்றி வகையற்றவனின் மனதில் தோன்றிய அபத்தங்களின்மேடா? என்று நடுநிலைமையாளர் நவில்க. அடியார்களுக்கு அருள்புரிய வந்து வந்துபோகும்கருணைக் கடல், இன்று அற்புதம்நிகழ்த்தத் தயங்குவதேன்? தாயைப் புணர்ந்த தனயன், மாற்றானுக்கு மனைவியை ஈந்த இயற்பகை, சூதில் பொருள்ஈட்டிய மூர்க்கன், கல்லில் கையை அரைத்த கபோதி, இவர்களைவிட மகிபாலன்பட்டியார் மதிப்பிலோ, ஒழுக்கத்திலோ, பத்தியிலோ, குறைந்துவிட்டாரா? பன்றிகளுக்குப் பால் கொடுத்த பரமசிவன், பசித்தழுத பாலகனுக்கு அருள்சுரந்த பரமதயாளன், மார்க்கண்டனுக்காகக் காலனை உதைத்தகாலன், பரியை நரியாக்கிய பரமன், சிலந்திக்கும், எருதுக்கும், எலிக்கும் முக்திகொடுத்தமுக்கண்ணன், தன்அடியார்கள்புலம்புவதுகண்டு கருணைபொழியக்கூடாதா? போகட்டும், அந்தக்கடவுள்கள்தான் கதியற்றுக்,கற்களாகிவிட்டனவென்றால்,அனலால் அழிக்கப்படாத சுவடிகள், வைகையில் எதிரேறின ஏடுகள், தொண்டர்நாதனைத் துதிடைவிடுத்த துதியமுதுகள், முதலையுண்ட பாலகனை அழைத்தபாடல்கள், மறைக்கதவைத் திறந்த பதிகங்கள், எலும்பைப் பெண்ணுருவாகக் கண்ட பண்கள் தங்கள் சக்திகளைக் காட்டக் கூடாதா?

•

வாழ்க்கையைத் திருத்த முன் வந்த எஃகு உள்ளம்படைத்த வீரர்களுக்கும், உண்மைக்காகப்போராடிய விஞ்ஞானிகளுக்குங்கிடைத்த பரிசு தீக்குண்டங்களாயிருக்க, நீங்கள் துள்ளிக் குதிப்பதேன்? எனச் சிலர் வினவலாம், எந்த நெஞ்சுறுதியும், நேர்மைத்திறனும் புருனேவைத் தூண்டியதோ, அவைகளே எங்களையும் தீச்சுழலுக்கு முன்கொண்டு வந்து நிறுத்துகிறது. மேலும் எங்களை எதிர்க்கும் தீக்குண்டங்களைவிடப் பலமுள்ளதொரு தீச்சுழல்தான், எங்களது சமுக, அரசியல் போராட்டங்களில் அடிப்படையாக அமைந்துளது. கலையலகில் கவலையற்ற உல்லாசவாழ்வு நடத்தும் உலகு, அதோ! ஆலமரத்தடியில் அரைவயிற்றுக்கஞ்சிக்காக உயிரைவிடும் கருமானைப்பற்றிக் கவலைப்பட்டதுண்டா? தனது மூச்சுப்பையைத் துருத்தியாக மாற்றி, உலைக்களத்தைப் பாதுகாக்கிற அவனது மகனுக்கு எல்லாம்வல்ல இறைவன் விட்டவழி அவ்வளவுதானா? காதல் இன்பமும், கலைப்பண்பும், கவிநயமும், கடவுளின் அருளும் அக்கருமானை எட்டிக்கூடப் பார்ப்பதில்லை. அவனுடைய தீசசுழலில்தான் வாழ்க்கையின் அச்சு வார்க்கப்பட்டது. அவனைத் தன்னுள்ளே இழுத்துக்கொள்ளத் தயாராயிருக்கும் சிறைக்கம்பிகள் அவனால் ஆக்கப்பட்டவையே. அவன் கைகளைக் கௌவவரும் விலங்குகள், அவனைக் குத்தவரும் ஈட்டிகள், அவனுக்குக் குழிதோண்டும் மண்வெட்டிகள் அவனுடைய உலைக்களத்தில்தான் செய்யப்பட்டன. வாழ்க்கைப் பாலத்தை அமைத்தவன் இன்று வறுமை ஆற்றில் தத்தளிக்கிறான். கோபுரத்தின் மேலுள்ள கும்பத்தைச்செய்தவன் இன்று மதிற்சுவரின்புறத்தே மாள்கிறான். உலகு எனும் வண்டி முன்னேற்றப்பாதையில் முடுகிச்செல்ல அவனால் செய்யப்பட்ட இரும்புச் சக்கரங்கள் அவன் கால்களைத் துண்டாக்கத் தயங்குவதில்லை. குடும்பச் சுமை அவன் முதுகைக் கூனலாக்கிவிட்டது. வறுமை அவன் வயிற்றைச் சுருக்கிவிட்டது. பசியும், பிணியும்அவன்வலியை உறிஞ்சிவிட்டன. பலத்தை மீறியபயம் ஏழ்மையில் ஆழ்ந்திருந்த அவனை ஊமையாக்கியது. உழைத்து உழைத்து உதிரஞ்செத்து, கருத்தலுத்து நீரைத்தேக்கிய கண்களுடன் மாடங்களையும், கோபுரங்களையும் பார்த்துவிட்டுத் தீச்சுழலை நோக்கும்பொழுது அவனுக்குஎத்தகைய எண்ணங்கள் தோன்றுமோ, அத்தகைய எண்ணங்களே தீச்சுழலின் முன்னிற்கும் எங்களையும் சூழ்கின்றன, பொதுவுடைமைப்பேச்சுகளைப் பொழுதுபோக்காகக்கொண்டுள்ள புல்லர்கள் உணரட்டும் காலம் மாறுமென்பதை. உலகின் போக்கு அவனை உதறித்தள்ளியது, உலகின் அடிப்படையை அவன் உடைத்தெறிவான். உலைக்களத்திருந்து தாவுகிற தீப்பொறிகள் பெருந்தீச்சுழலாகமாறும். அப்பொழுது அடக்குமுறையின் கொடுமையோ, விதிசெய்யும் சதியோ தீச்சுழலின் வேகத்தைத் தடுக்கமுடியாது. கனல்பந்தங்களை ஏந்திநிற்கும் எங்களின் முடிவான கொள்கை: பிறந்த அனைவருக்கும்வாழஉரிமையுண்டு,இவ்வுலகில், அதை மறுப்பவைகளுக்கு மாளஇடமுண்டு தீச்சுழலில் என்பதே.

# அது எது?

"தோழர் காந்தியாரைக் கூடியவிரைவில் நீங்கள் சந்திப்பீர்களா" என்று ஜனப் ஜின்னுவை நிருபர்கள் கேட்டார்கள்.

"அது தமது அந்தராத்மாவைப் பொறுத்ததெனத் தோழர் காந்தியார் கூறுகிருர். அங்கு எனக்கு இடமில்லை. நான் கூற முடியாது," என்று ஜனப் ஜின்னு பதில் சொல்லியிருக்கிருர். இவ்வுரையாடல், இருபெரும் அரசியல் தலைவர்களுக்கு இடையே நடந்திருக்கிறது. அதிலும், கல்வியறிவில் ஒத்த பயிற்சியுடைய இருவருக்குமிடையே நடந்த பேச்சு இது. ஜனப் ஜின்னுவும் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பரீட்சையில் தேரியவர். தோழர் காந்தியாரும்அதேபோன்று தேறியவர்தான். ஆனல், தோழர் காந்தியார் கூறும் அந்தராத்மாவைப் பற்றி ஜனப் ஜின்னு ஒன்றும் புரிந்தகொள்ள முடியவில்லை. "அங்குஎனக்கு இடமில்லை; என்போன்ற சாதாரணமானவர்களுக்கு அவரது அந்தராத்மா முன்னிருக்க இடங்கிடையா"தென்றே ஜனப் ஜின்னு கூறுகிருர்.

இது, ஜனப் ஜின்னுவுக்கு மட்டுமல்ல, அறிவோடு கூடிய எவருக்குமே புரியக்கூடிய அல்லது புரிந்துகொள்ளக் கூடிய தல்லத்தான். அறிவையும் அனுபவத்தையும் துணையாகக்கொண்டு பேசப்படவேண்டிய காரியங்கள், அவ்விரண்டையும் விட்டு வேறென்றின் துணைகொண்டு பேசப்படுவதென்றல், அது யாருக்குத்தான் புரியும்? யாருக்குத்தான் இடமுண்டு அங்கே?

படிப்பது அறிவு பெறுவதற்காக, அப்படிப்பெற்ற அறிவை ஏதோ அந்தராத்மா என்று கூறப்படும் ஒன்றுக்கு அடகு வைப்பதென்றல், "நான் இருக்கப்படிப்பேன்? என்றுஅந்த அந்தராத்மா அவருக்குச் சொல்லியிருக்கவேண்டாமா? அறிவைப்பெற்ற ஒருவன், அறிவின் துணையைநாடாமல் இன்னென்றின் (அந்தராத்மாவின்) துணையை நாடுவதைக், காலம் கற்பிக்கும் புதுமைகளில்ஒன்றுகவன்றே கருதவேண்டியிருக்கிறது.

'அந்தராத்மா' என்று தோழர் காந்தியார் எதைக் குறிப்பிடுகிருர் என்பதே நமக்குத் தெரியவில்லை. அது எது? அறிவா? அருளா? அவநம்பிக்கையா? அயலான் ஒருவனு? அறிவென்றல், யோசித்துக்கூறப்படுவது என்று சொல்லலாம். அருள்என்றல் அப்போதேஅந்தவிநாடியிலேயே மின்சார ஆற்றல்போல் உடனே சொல்லிவிடலாம். அவநம்பிக்கை யென்றல், நம்பமுடியவில்லை என்ற பதிலை அப்பவே சொல்லிவிடலாம். அயலான் ஒருவனல் என்றல், எனக்குச் சொந்தப் புத்தி இந்த விஷயத்தில் கிடையாது, "அவரைக்கேட்டுத்தான் சொல்லமுடியு"மென்று,தான் நினைக்கும் ஆளை மனதில் வைத்துக்கொண்டு சொல்லிவிடலாம்.

இப்படி, விளக்கமாகப் புரியக்கூடிய முறையில்—கேட்பவர்கட்கு விஷயம் எளிதில் தெரிந்துகொள்ளக் கூடிய முறையில் சொல்லாமல், எவருக்கும்—எந்தக் காலத்திலும்—எந்த வகையிலும் விளங்கிகொள்ள முடியாதபடி பதில் கூறுவதை ஏமாற்று வித்தை யென்றே எவரும் கருதுவர்.

தெரிந்தோ தெரியாமலோ ஒருவன் பலரால் மதிக்கப்படுகிருன் என்றல், அந்த மதிப்பைத் துணையாக வைத்துக்கொண்டு மக்கள் அனைவரையுமே ஏமாற்றிவிடலாம் என்று எண்ணுபவன், காலக்கிரமத்தில் தானே ஏமாறுவான் என்பதை நாம் அறிவையும் அனுபவத்தையும் துணையாகக்கொண்டுகூறுகிறேம். 'நான் ஏமாந்துவிட்டேன், தவறி விட்டேன், பிழை செய்துவிட்டேன்' என்ற சொற்கள், இந்த அந்தராத்மாவைத் துணையாகக்கொண்டுள்ள தோழர் காந்தியாரின் வாயிலிருந்தே பலதடவை உச்சரிக்கப்பட்டுள்ளன வென்பதைநாம் அறிவோம். ஆகையால், ஏமாறுவதற்கும் உரிய கருவிகளைக் கண்டு பிடிப்பதில் துணை புரியும் அந்த அந்தராத்மா எது? எப்படிப்பட்டது? என்பதை நாம் அறியவேண்டிய அவசியம் இல்லை என்றலும், தோழர் காந்தியாராவது 'அது எது' என்பதை இனிமேலாவது தெரிந்துகொண்டு, "யோசித்துச்சொல்கிறேன், பிறரைக்கேட்டுச் சொல்கிறேன், படித்துச்சொல்கிறேன்" என்ற இந்த முறைகளைக் கையாளுவதே காலம் கற்பிக்கும் பாடம் என்று அவருக்குக் கூறுகிறேம்.

——

## மறைவு.

காவேரிப் பட்டினம் திராவிட கழகத்தின் அதிகமுக்கியஸ்தர், தோழர் மு. அப்பாசாமிநாயுடுஅவர்கள்25-9-44 இரவு இறந்துபோனர். விசனத்தில் மூழ்கிக் கிடக்கும் அன்னவரின் குடும்பத்தாருக்கு இந்நகர் நாட்டாண்மைக் கழகத்தார் ஓர் அனுதாபத் தீர்மானமும் அனுப்பியுள்ளனர்.

——

## சின்னளப்பட்டி

நாடார்பேட்டையில் S. R. B. ராமசாமி அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் திராவிடர்கழகம்நிறுவப்பட்டது. ஷை கழகத்திற்கு நிர்வாகஸ்தர்களும், எடுக்கப்பட்டனர். தோழர் S. R. B. ராமசாமி தலைவர்.

## அறிக்கை.

தஞ்சை ஜில்லாவில் திராவிடர் கழகம் இருக்கும் தாலுக்காவில் தாலுக்கா ஒன்றுக்கு குறைந்தது 1000 ஒரு ஆயிரம் மெம்பர்களுக்குக் குறையாதபடி அங்கத்தினர்கள்சேர்த்து மாகாணக்கமிட்டிக்கு ஈரோட்டுக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அங்கத்தினர் புத்தகம் தேவையிருந்தால் ஈரோட்டுக்கு எழுதித் தருவித்துக்கொள்ளவும் திராவிடர் கழகங்கள் பதிதாக ஏற்படுத்த வேண்டியவர்கள் அதன் பூரா விபரத்தையும் எனக்கு எழுதினல் அதற்காவன ஏற்பாடுசெய்வதற்கு முயற்சிக்கிறேன். தாலுக்கா கழகங்கள் அந்தந்த டிவிஷன்களில் கிராமகழகங்கள் ஏற்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருச்சி ஜில்லாவில் என்னுடைய பொறுப்பைத் தோழர் T.P. வேதாசலம் அவர்கள்ஏற்றுஆவன காரியங்களைசெய்ய கேட்டுக்கொள்ளுகிறேன்.

K. K. நீலமேகம்
திராவிடர் கழகம் கும்பகோணம்

நந்தி:—"புறமார்க்" திருச்சி.




## திராவிட மாணவர் கழகம்

அசனமாபேட்டை.

1—10—44ல் தோழர் K. S. முருகேச முதலியார் அவர்கள் தலைமையில் ஷை கழகக்கூட்டம் நடைபெற்றது.

அதுபோது T. S. மாணிக்கம் அவர்கள் தலைவராகவும், K. பாலசுந்தரம்அவர்கள் செயலாளராகவும், P. நடேசன் அவர்கள் பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

# பகல்வேஷம்.

—S. நாராயணசாமி.—

"பகையாளிக்குடியைஉறவாடிக்கெடு" என்பதைப்போல் ஆரியர்கள், களங்கமில்லாத நெஞ்சத்தையடைய திராவிடரை ஏமாற்றி, அவர்கள் வீரவாழ்வைக் குலைந்துபோகச்செய்து, குருடனுக்குச் சமமாக மக்களை எய்த்து அடிமைகளாகச் செய்தனர். திராவிடர்கள் தாழ்ந்ததற்கு காரணமென்ன? ஆரியபகல்வேஷத்தைக் கண்டு அதனிடம் நாட்டம் கொண்டு, அதன்வைதிகக் கொள்கைகளைப் பின்பற்றி, அதன்படி ஒழுகினதால்வந்த வினையேயாகும். அவர்களால் ஆக்கப்பட்ட புராணங்களைத் தீயிலிட்டுப் பொசுக்க வேண்டும், அவர்களால் வடமொழியில் பூஜிக்கப்படும் கடவுள், இத்திராவிடநாட்டிற்குத் தேவையில்லை, என்று பார்ப்பனர்களுக்கு எதிரிடையாகப் பேசும் தன்மானவாதிகளைப், பார்ப்பனர்களால்உண்டாக்கப்பட்ட எமன் என்ற ஓர்விததேவலோக அரசன், ஆரியர்களை ஏசுகிறவனையும், புலால் உண்ணுகிறவனையும், புராணங்களுக்கு எதிரிடையாக நின்று நாத்தீகம்பேசுகிறவனையும், பிராமணபக்தியில்லாதவனையும், பிறர்மனைவிமேல் இச்சைகொள்பவனையும், பிறர்பொருளை அபகரிப்பவனையும், பாசம் என்ற கயற்றால் கட்டி, எருமைக்கிடாவின்மேல்போட்டுக்கொண்டுபோய், கொடிய நரகத்தில் தள்ளி இம்சைசெய்கிறானும், பாருங்கள் ஆரியர்களின்மோசத்தை! பிராமணபக்தி கடவுளுக்கும் மேலானதாம். அவர்களுக்குப் பணம், பசு, காய்கறிகள், துணிமணிகள் பச்சரிசி, நெய் முதலியவைகள் தானமாகக் கொடுத்துக்கும்பிட்டால் நம் குறையெல்லால் சரியாகி மோட்சபதவி கிட்டுமாம், சுவர்க்கலோகக்கதவுகளும் நம்மைக்கண்டவுடன் தடையில்லாமல் வழிவிடுமாம். என்ன அக்ரமம், நம்மைஏமாற்ற எவ்வளவு தந்திரமான புராணங்கள்! மோட்சலோகக் கதவைக் கண்டவர்கள் யாராவது இருக்கின்றார்களா, என்று புராணம்படித்துச் சொல்லும் பண்டிதமணிகளைக் கேட்கிறேன்.

திராவிடர்கள் பிறர் பொருளை அபகரித்தால் நரகம், பிறர்மனைவிமேல் இச்சைகொண்டால் நரகம், பிறரைப் பழித்தால் நரகம், புலால் உண்டால் நரகம், புராணங்களுக்கு எதிரியானால் நரகமாம், ஆரியர்களுக்கு மட்டும் அப்படியல்ல, அவர்கள் திராவிடர்களைத் தீண்டாதவர்கள், மதுவை உண்ணும் குடியர்கள், புராணருசி அறியாத புழுக்கள், புலால் உண்ணும் புலையர்கள், காமாந்தகாரர்கள், பாபிகள் என்று நாக்கில் நரம்பின்றி வைதாலும் திட்டினாலும் அந்த எமன் அவர்களை ஒன்றும்செய்யமாட்டானும், பாருங்கள் ஆரியர்கள் சூழ்ச்சியை! திராவிடர்கள்தான் தீச்செயல்காரர்கள்என்று சொல்லும் ஆரியர்களையும், அவர்கள்அடியார்களான பண்டிதபுராணபிரசங்கமணிகளையும் சற்று நினைத்துப்பார்க்கச்சொல்லுகிறேன். ஆரியக் கடவுள்கள் செய்திருக்கும் அக்ரமங்களை. பக்தன்மனைவியை பள்ளியறைக்கு அழைப்பதும், குழந்தைக்கறி வேண்டுமென்று கூசாமல்கேட்பதும், பிறர்மனைவிமேல் மோகம் கொள்வதும், பிறர் சிகைமேல் ஆசைப்படுவதும், தீயவர் உண்ணும் மதுவை தேவ அமிர்தமாகக் குடிப்பதும், பெண்களைச் சூறையாடுவதும், வழிகொள்ளை அடிப்பதும் வஞ்சகம் பேசுவதும். இன்னும்பல விதபகல் வேஷம்கொள்வதும் சரியா? இதுஅக்கடவுளுக்கு அடுக்குமா? அக்கடவுளைத்தண்டிக்க அந்த எமனுக்கு உரிமை கிடையாதா? திராவிடர்கள்தான் ஏமாளிகளா, இவர்களைமட்டும் தண்டிக்க.

மனிதருக்கு ஆயுள் நூறுதான் என்று காலநிர்ணயம் கண்டவர்போல் சொல்லும் புராணசாத்திர சம்பன்னர்களைக்கேளுங்கள், ஆரியரால் உண்டாக்கப்பட்ட, தமிழர்களை ஏமாற்ற எழுதப்பட்ட, பக்தபுராணங்களில் சொல்லப்பட்டுவரும் அகத்தியனுக்கு ஆயுள் எவ்வளவு? வசிஷ்டருக்கு ஆயுள் எவ்வளவு? வால்மீகிக்கு ஆயுள்எவ்வளவு? நாரதருக்கு ஆயுள் எவ்வளவு? இதைக்கேட்டால் புராணிகர்கள் புஸ் என்று நாகம்போல் சீறுவார்கள், காவியக்காரர்கண்களில் தீப்பொறிபறக்கும், பண்டிதமணிகளின் நாவானது துடிதுடிக்கும், சு. ம.க்களுக்கு வேறுவேலையே கிடையாது, கடவுள் இல்லை, காவியம், புராணம் வேண்டாம் என்று கண்டபடி பேசும்வேலைதான், அவர்களுக்கு என்னதெரியும், புராணத்தின் இனிமைதெரியுமா? காவியத்தின் ருசி அறிவாரா? கலையின் நிலைதான்தெரியுமா? என்று சினந்துகொள்ளும் புராணபண்டிதர்களைக் கேட்கிறேன். இப்போது நம் தமிழ்நாட்டில் இருக்கப்பட்ட புராணக்கதைகளை எடுத்துப் பார்க்கச் சொல்லுகிறேன். எந்தப் புராணநாடகத்தை எடுத்துப்பார்த்தாலும் நாரதர்விராத நாடகமே கிடையாது! அதில் ஆரியர் வேடம் தோன்றாத இடமேஇல்லை. இதில் தோன்றும் கடவுள்களும் காமப்பித்துக்கொண்டு கண்ட கன்னிகைகளைக் கற்பழிப்பதாக இருக்கிறதேயொழிய, ஓர்பக்தனையாவது சுயமரியாதையுடன் விளங்கும்படி செய்யவில்லை, இதுதான் புராணத்தின் மகிமையா என்றுகேட்கிறேன்.

விஷ்ணுவானவர், 10, அவதாரங்கள் எடுத்துபாரில் அசுரர்களைக்கொன்றாராம், (யாருக்காக செய்த அவதாரங்கள் என்பதை யோசித்துப் பாருங்கள்) பார்ப்பனர்களை நமக்குமேலாகக் கொள்ளக்கூடாது, பூதேவர்கள் என்று சொல்லிக்கொண்டு தமிழர்களை ஏமாற்றித் திரியும் சூதுக்காரர்கள் நம் தமிழகத்தில் இருக்கக்கூடாது, அவர்களால் செய்யப்படும்யாகம் முதலியசடங்குகள் இங்குநடக்ககூடாது அவர்கள்நச்சுமொழி நம்மணிமொழியில் சேர்க்ககூடாது என்றுஅவர்களைவிரட்டி அடித்து, அந்தப்பார்ப்பனக் குலத்தையே அடக்கி அழித்துவந்தவர்களைக்கொல்ல எடுத்த அவதாரமாம். ஓர் அவதாரத்திலாவது, அப்பகவான் பார்ப்பனர்களைப் பார்த்து, உங்களுக்குத்தான் என்றும் இங்கு தீங்குநேரிடுகிறதே, நானும் உங்களுக்காக அடிக்கடி உலகில் என்வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு அவதரிக்க நேரிடுகிறதே, நீங்கள்இந்தத்திராவிடநாட்டில் வசிப்பதைவிட்டு, உங்கள் நாடாகிய வடநாட்டிற்குச்சென்று அங்கு எனக்குச் செய்யும் பூஜை, யாகம் முதலிய சடங்குகளை இன்னலின்றிச் செய்யுங்கள், என்று எடுத்துரைத்து அவர்களைத்திராவிடநாட்டிலிருந்து போகும்படி சொல்லவில்லை. எப்படிச் சொல்லுவார், உண்மையாக அவதாரம் செய்திருந்தால்தானே சொல்லக்கூடும், எழுத்தாளர்களால் உண்டாக்கப்பட்ட கடவுள்களால் எப்படி எடுத்துரைக்கமுடியும்!!

உதாரணமாக எட்டாவது அவதாரம் செய்யவேண்டுமென்று தேவர்கள் விஷ்ணுவிடம் முறையிட்டுக்கொள்ள விஷ்ணு எடுத்தார் கிருஷ்ணனாக, ஆரியர்களை இரதத்தில்கட்டியும், வண்டிகளில் பூட்டியும், வாள்கொண்டுசித்திரவதைகள் செய்தும், அவர்கள் செய்யும் யாகங்களை அழித்துவந்தவர்களைக்கொன்றும் காளிங்கமடுவில் குதித்து காளிங்கன்என்றபாம்பின் கர்வத்தை அடக்கின அப் பகவான், தற்போது பசுபிக் கடலில் இருந்துகொண்டு, பலங்கொண்ட பிரிட்டிஷ்காரரின் கப்பல்களை பாம், வெடிகுண்டு, விட்டுமூழ்கடித்து, மக்களைமருளவைக்கும் எதிரிகளை விரட்டியடிக்க ஓர் அவதாரம் என்எடுக்கக்கூடாது? இரங்கோன்-பர்மா, சிங்கப்பூர், சிட்டகாங்-மணிப்பூர் முதலிய இடங்களில் நடக்கும் கொடிய யுத்தத்தில் மாளும் மக்களுக்கும், வீரர்களுக்கும், தேவர்களுக்கு அமிர்தத்தைக்கொடுத்து அழியாமல் இருக்கச்செய்ததுபோல் நம் திராவிடப் போர்க்களவீரர்களுக்கு ஏன் அமிர்தத்தைக்கொடுத்து அழியாவண்ணம் இருக்கும்படி செய்யக்கூடாது? திராவிடர்களுக்குக் கொடுக்க மனமில்லாவிட்டாலும், அவர் அடியார்களாகிய பார்ப்பனர்களுக்காகிலும் கொடுத்து, யுத்தத்தில் எதிரிகளைப் புறமுதுகுகாட்டி ஓடும்படிச்செய்ய அவர்களை முன்னணிப் படைக்கு ஏன் அனுப்பக்கூடாது. முப்புரத்தையும் பார்த்த மாத்திரத்திலே சுட்

(7ம் பக்கம் பார்க்க)

## பகல்வேஷம்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி.)

டுச்சாம்பலாக்கிய அச்சிவபெருமான், இப்பொழுது நம்நாட்டில் நடக்கும் யுத்தத்தில் எதிரிகளை நாசமாக்கத்தன் கண்ணை ஏன் திறக்கக்கூடாது, ஒருவேளை இப்போது அக்கண் திறக்கவரவில்லையா! வியர்வையிலிருந்தும், கையிலிருந்தும், உரோமத்திலிருந்தும் கண்ணிலிருந்தும் நினைத்தபொழுது புத்திரர்களை உண்டாக்கின அச்சிவன், இக்கொடிய யுத்தத்தை நிறுத்த ஓர் புத்திரனைப்படைத்து முன்னணிப்படைக்கு ஏன் அனுப்பக்கூடாது? இப்போது அவர்மந்திரம் பலிக்கவில்லையா! சத்துருக்களைக்கொல்லும் சூலாயுதம் எங்கேபோய்விட்டது? குண்டோதரப்புலி எங்கேபோய்விட்டது? கூடநிற்கும் பூதகணச்சூரர்கள் எங்கேபோய்விட்டார்கள்? வலிமை மிகுந்த நந்தி எங்கே? கணப்பொழுதில் உலகத்தையே சமநிலமாக்கும் வல்லமைபடைத்த கங்கை எங்கே? இப்போது அவள், சடையைவிட்டு வாமாட்டேன் என்று சொல்கிறாளா! நாரதர் எங்கே போய்விட்டார்? எத்தேவியையாவது மணந்துபிள்ளைகளைப்பெற்றுக்கொண்டிருக்கிறாரா! அல்லது வீணை ஒடிந்துவிசனப்பட்டுக்கொண்டிருக்கிறாரா? அல்லது முன்பு சிவபெருமான் பார்வதியுடன் ஆயிரதேவவருடம் சம்போகத்தில் இறங்கியதுபோல் மறுபடியும் இறங்கிவிட்டாரா? அதைக் கலைக்கத் தேவர்களை எல்லாம்கூட்டமாக கூட்டிக்கொண்டுவரச்சென்றிருக்கிறாரா? என்ன காரணம், அக்காலத்தில் அளவிலாத அவதாரங்கள் நினைத்தபொழுது எடுத்துவந்த அக்கடவுள் இப்பொழுது எடுக்க ஏன்தயங்குகிறார் என்று புராணம் படித்துச் சொல்லும் பண்டிதமணிகளைக்கேட்கிறேன்.

வீரத்திராவிடர்களே, இன்னுமா நாம் இப்புராணச்சேற்றில் புரளுவது, நமக்குள் ஜாதிபேதம் எதற்கு, எத்ற்கு இத்தனை கடவுள்கள், எதற்கு மந்திரங்கள், எதற்கு இத்தனைகோயில்கள், இவைகளுக்கு அடிமைப்பட்டு வறுமையில் உழலவேண்டுமேயொழிய, நம்மைத்தலங்கவைக்க ஓர் கடவுளாவது முன்வரமாட்டார். நாட்டின் நிலைமையை உற்றுப்பாருங்கள், மக்கள் பட்டினியால் பாதவிப்பதும், பஞ்சத்தால் துடிப்பதும், இருக்க இடமில்லாமல் பலர் தவிப்பதும் காண நமக்கு பரிதாபகரமாக இல்லையா, அத்திராவிட ஏழைகளை எழுச்சிசெய்ய நாம் அவர்களுக்கு உதவிபுரியாமல் வீணைகப் பொருளைக்கொண்டுபோய், வீணர்களின் கற்சாமிகளுக்குச்செலவிட்டு, வேடிக்கை பார்ப்பது நமக்குத்தகுமா? கருடசேவை என்றும், ரிடபவாகனமென்றும், ராவண வாகனசேவைஎன்றும், பஞ்சமூர்த்திகள் அலங்கார சேவை என்றும், பலவிதமான வாகனங்களைச்செய்து, அவைகளுக்கு பணத்தை வீணைகச்செலவழித்துப் பலன் ஒன்றும் கண்டபாடில்லையே, இவைகள் எல்லாம் எதற்காகச் செய்யப்படுகிறது, பார்ப்பனர்கள்சூது *ன்றாகத்தெரிந்தபிறகுமா அவர்களுக்குப்பணியாளாக இருக்க வேண்டும். அவர்களால் ஆக்கப்பட்ட உயிரற்ற கற்சாமிகளை கைஎடுத்தா கும்பிட வேண்டும், முஸ்லீம்களைப் பாருங்கள், நம்மைப்போல் அடிக்கொரு கோயில் கட்டிக் கண்ட சாமிகளை கையெடுத்தா கும்பிடுகிறார்கள், அவர்களில் பாாப்பான் முதலி, படையாச்சி என்ற பங்கீடு கொண்டா வாழ்கிறார்கள், பணத்தைக் கண்டபடிசெலவுசெய்யும்குருட்டுக்கொள்கையையாகையாளுகிறார்கள். நாம்மட்டும் ஏன் அவர்களைப்போல் வாழக்கூடாது. சுதந்திரம்நிலவிய நம்திராவிட நாட்டை நிலைநாட்டவேண்டுமானால், முதலில் நாய் பார்ப்பனர்களுக்கு அடிமையாக வாழுவதைநீக்கவேண்டும். புராணக்கோட்பாடுகளைப் பொசுக்கவேண்டும், பிறகு பாருங்கள் நம்நாடு அடையும் மேன்மையை. இதற்கு ஆவனசெய்வது திராவிடர்களின் முதற்கடமை.

---

### ஒரு வேண்டுகோள்.

தமிழர்களின் உழைப்பினால், "தலம்" என்ற பெயரினால், ஆரியரின் அரணாக விளங்கும் தில்லையில், இவ்விருபதாம் நூற்றாண்டிலும் இறுமாப்புடன்தான்வீற்றிருக்கின்றது ஆரியம் என்று காட்டும் அறிகுறியாக வருகின்ற மாதத்து முதல் வாரத்தில் வர்ணாச்சிரம மாநாடு நடைபெற விருக்கின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா?

பிராமண, க்ஷத்திரிய, வைசிய சூத்திரர் என்ற வர்ணாச்சிரமப்பாகுபாடு உண்மையிலேயே இந்நாட்டிலுண்டா? இவ்வேறுபாட்டால் நாடு அடைந்த அல்லது அடைகின்ற பலாபலன் என்ன? தற்காலத் தமிழர்கள் அனைவரும் சூத்திரர்கள் என்று தானே ஆரியப் பார்ப்பனர்கள் சாற்றுகின்றனர். வேண்டுமென்றால் சிலரைச்சற்சூத்திரர்கள் என்று கூறலாம். இந்த நிலையை நீங்கள் ஒப்புக்கொள்கின்றீர்களா? நீங்கள் சூத்திரர்கள்தான் என்று வற்புறுத்துவதற்காகத்தானே இம்மாநாடு? இதற்கு நீங்கள் உங்களுடைய மாறுபாடான கருத்தைத தக்க காலத்தில் தக்க இடத்தில் தெரிவித்துக்கொள்ள வேண்டாமா?

என்ன செய்யப்போகின்றீர்கள்? திராவிடர் கழகத்தாராகிய யாங்கள் ஒருசில பொதுக்கூட்டங்களையும், கருத்துகள் நிரம்பிய அறிக்கைகளையும், தொண்டர் படை சூழ்ந்த ஊர்வலங்களையும் கொண்டு மாநாட்டிற்கு எங்கள் மாறுபாட்டைத் தெரிவித்துக்கொள்ள முடிவு செய்திருக்கின்றோம்.

நீங்கள் இந்த நற்காரியத்திற்குத், தமிழர்களுக்குள் வேறுபாடில்லை என்ற தன்மையை நாடறியச் செய்யும் பெரும்பணியினுக்கு உழைப்பும் பொருளும் தந்து எங்களை ஊக்குவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றோம்.

சிதம்பரம்
திராவிடர் கழகத்தார்.

---

## கும்பகோணம்.

P. முத்துதனபாலசெட்டியார் (அட்வகேட்) தலைமையில் டாக்டர் T.M. நாயர் ஞாபகார்த்தக் கட்டிடத்தில் 20-9-44 தேதி ஓர் பொதுக்கூட்டம் கூடியது சேலத்தில் நடந்த மாகாண மகாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்து அவைகளை ஒப்புக்கொள்ளப்பட்டது. சென்னை "சன் தியேட்டரில்" நடந்த கூட்டம் திராவிடர்களின் பிரதிநிதித்வம்வாய்ந்த கூட்டமல்ல என்றும் அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் செல்லாதுஎன்றும், திராவிட மக்களை அத்தீர்மானங்கள் கட்டுப்படுத்தாதென்றும் மாகாண மாநாட்டில் செய்த தீர்மானத்தின்படி தெ. இ. ந. உ. சங்கம் என்னும் பெயரை "திராவிடர் கழகம்" என்று மாற்றத்தீர்மானம் செய்கின்றதென்றும் இக்கக்ஷியில் இதுவரைச்சேராத திராவிட மக்கள் எல்லோரையும் சேரும்படிகேட்டுக்கொள்கின்றதென்றும் சேலம் மகாநாட்டின் நடவடிக்கைகளைக் கண்டிக்கிற ஜஸ்டிஸ் கக்ஷி அங்கத்தினர்கள் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள பெரியார் ஈ. வெ. இராமசாமியைக் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானங்கள் நிறைவேறின.

---

### திராவிடர் கழகம்.

2—10—44 திங்கள்கிழமை இரவு 10 மணிக்கு காரைக்குடி முத்துப்பட்டினம் சமதர்ம விலாவில் தோழர் விசாலாட்சி இராமசுப்பையா இல்லத்தில் திராவிடர் கழகம் ஒன்றுநிறுவப்பட்டது. நா. இராமநாதன் அவர்கள் தலைவர்.

---

### திராவிடர் கழகம்
நாமகிரிப்பேட்டை.

20—9—44ல் தோழர் A. அய்யாவு அவர்கள் தலைமையில் கூடிய கழகஅங்கத்தினர்கள் கூட்டத்தில், தோழர் செ. முத்துகிருட்டினன் அவர்கள் தலைவராகவும் தோழர் T. A. பெத்தி அவர்கள் உபதலைவராகவும், தோழர்கள் M. K. அங்கமுத்து, S. அலாவுதீன் அவர்கள் செயலாளராகவும், தோழர்கள் K. முனிசாமி, A. பெத்தன்னன், A. சிக்கிரியா, T. பழனிசாமி, G. சீனிவாசன், ஆகியவர்கள் அங்கத்தினர்களாகவும் 9 பேர்கள் அடங்கிய கமிட்டி அமைக்கப்பட்டது.

# தமிழரா? திராவிடரா?

காரைக்குடி கதிரேசன் கழகத்தின் முதலாவது ஆண்டுவிழாவில் தலைமை வகித்த தோழர் S. சோமசுந்தர பாரதியார் அவர்கள், தமது தலைமை உரையில் "திராவிடர்கழகம்" என்று பெயரிடுவது தமிழருக்குப் பொருத்தமில்லை என்ற பொருள்பட சிலகுறிப்புகள் வெளியிட்டதின் காரணமாக, இவ்வூர் திராவிடகழகத்தார், தோழர்களான, ராம. சுப்பையா, நாராயணசாமி ஆ. சுப்பையா. கே. வாசுதேவன். கோ. மா. ஆறுமுகம். ராம வீரப்பன். சி. பெரிசி. மெய்யப்பன் ஆகியோர்தோழர். பாரதியார்அவர்களை. அவர்கள் தங்கியிருந்த இடத்தில் சென்றுகண்டு அடியிற்கண்ட கேள்விகளைக்கேட்டார்கள்:-

கேள்விகள்:-ஆரம்பத்தில்,நாகரிகத்தில் சிறந்ததும், மிகப்பழமையானதும் திராவிடர் நாகரிகம்தான் என்று கூறினீர்கள் பின்னர், பண்டை சரித்திரத்தில் திராவிடநாகரிகம் என்று சொல்லப்படவில்லை என்று சொன்னீர்கள். ஆரியருக்குமுன் இங்கு, திராவிடர்களே வாழ்ந்துவந்ததாகவும் தானே சரித்திரப்புத்தகங்கள் கூறுகின்றன? 4—12—38ல்இந்நகரில் நடைபெற்ற இராமநாதபுரம் ஜில்லா 2-வது தமிழர் மகாநாட்டில் தாங்கள் நிகழ்த்திய தலைமை உரையில் பழங்காலத்தில் தமிழ் ஒன்றேபேசிய, திராவிடர் பின்தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, என பல வேறு மொழிபேசும் கிளைக்கூட்டமாகப் பிரிந்து வாழ்வது உண்மை வரலாறு உணர்ந்த நமக்குக்கண்கூடு" என்றுகுறிப்பிட்டிருக்கிறீர்களே, அதுஎந்த திராவிடரைப்பற்றி? தமிழர் திராவிடஇனத்தைச் சேர்ந்தவர் அல்லவா?

தமிழரை திராவிடர் என்று அழைப்பதும் திராவிடர்கழகம் என்று பெயரிடுவதும் இழுக்கா?

## பாரதியார் பதில்

இந்நாட்டுக்கு வந்த ஆரியர்கள் விந்திய மலைக்குத் தெற்கே ஓடிவளைந்து கிடக்கின்றபூமியை தீபகற்பம்என்று பொருள்படுகின்ற திராவிடம் என்ற வடமொழிப் பெயராலும் அந்த பூமியில் வாழ்ந்த மக்களைத்திராவிடர் என்ற பெயராலும் அழைத்தார்கள். இந்நாட்டுக்குவந்த ஆங்கிலேயர்களும் அந்தப்பெயர்களை ஏற்றுக்கொண்டு அப்படியே எழுதிவைத்தார்களேயன்றி பண்டைத்தமிழ் நூல்கள் எதிலும் திராவிடம் திராவிடர் என்ற பதங்கள் எனக்குத் தெரிந்தவரையில் காணப்படவில்லை. மனம்குளிரச் சொல்லக்கூடிய "தமிழகம்"என்றசொல்இருக்க அதைவிட்டு யாரோ எவரோ சொன்ன பிறமொழிப் பெயரை ஏன் உபயோகிக்க வேண்டும்?

(கழகத்தார் கேள்வி. நீங்களே உங்கள் உரையில் திராவிடர் என்று குறிப்பிட்டிருக்கிறீர்களே என்று கேட்டதற்கு) "தவறு செய்வது மனிதனின் இயற்கை. நான் முன் நிகழ்த்திய உரை ஜஸ்டிஸ் கட்சியில் ஆந்திரரும், மலையாளிகளும், சேர்ந்திருந்த காலத்தில் நிகழ்த்தப்பட்டது. இப்போது அவர்கள் யாரும் திராவிடஸ்தான் கேட்கவில்லை. நாம் ஏன் அவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்? தமிழ்நாடு மட்டிலும் கேட்டால் போதாதா?

இந்த சந்தர்ப்பத்தில் மற்றவர்கள் யாரும் ஒருவேளை இப்போது சேர்ந்திராவிட்டாலும்அவர்களையும் சேர்க்கவேண்டுமென்ற பெருநோக்குடனேயே அப்படிப் பொதுப்பெயரை இட்டிருக்கிறார்கள் என்று பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு பாரதியார் அவர்கள் "அப்படி அவர்கள் சேரும்போது நான் விட்டுக்கொடுக்கத் தயார்" என்றுபதில் அளித்தார்.

ஆந்திரர்களும் மலையாளிகளும்சேர்ந்த பிறகு அப்படிப்பெயர் வைக்கலாமென்று தாங்கள் சம்மதிக்கும் பொழுது இப்பொழுதே அப்படிபெயர் வைப்பதில் என்ன குற்றம் என்று திராவிட கழகத்தார் கேட்டார்கள். ஆந்திரர்களும், மலையாளிகளும் ஒருபோதும் சேரப்போவதில்லை. அவர்கள், கலையாலும் மொழியாலும் ஆரியத்தோடு கலந்து விட்டார்கள் ஆரியம் புகுத்தியதை உங்களால் ஒருபோதும் அழிக்கமுடியாது என்று கூறிவிட்டு பாரதியார் கூட்டத்திற்குப் புறப்பட்டார்.

* * * *

இக்கருத்துபற்றிஅன்பர்களின் "விவாதம்" வரவேற்கப்படுகிறது. (ஆசிரியர்)

---

## பெரியார் பிறந்ததினவிழா.

29—9—44 வெள்ளிக்கிழமை மாலை 7-மணிக்கு திருச்சிவட்டம் மேலக்கற்கண்டார்கோட்டை திராவிடர் கழகத்தின் சார்பில் திருச்சி வழக்கறிஞர் தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் தலைமையில் பெரியார் பிறந்ததினவிழா நடைபெற்றது.

## திராவிடர் கழகம்
### தேசூர்.

30—9—44 அன்று தேசூர் திரு. P. K. N. இராமலிங்க முதலியார் சத்திரத்தில் இயக்க அன்பர்கள் ஒன்று கூடிக் கழகத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் சேலம் மாநாட்டுத் தீர்மானங்களையும் ஒப்புக்கொண்டு திராவிட கழகம் அமைக்கப்பட்டுள்ளது. புதிதாக 20 அங்கத்தினர்கள் சேர்ந்துள்ளனர்.

## அறிக்கை.

சென்னை, செங்கற்பட்டு, வடஆற்காடு மாவட்டத்,திராவிடர் (ஜஸ்டிஸ்) கழகங்களின் ரீஜினல் லீடர் தோழர் T. சண்முகம் அவர்கள் கீழ்க்கண்டஅறிக்கையை விடுத்துள்ளார்:—

சேலம் மாநாட்டுத் தீர்மானப்படி, சென்னை நகரில் இன்றுவரை 600 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். அக்டோபர்மாத முடிவுக்குள் குறைந்தது 3,000 உறுப்பினர்களையாவது சென்னை நகரில் மட்டும் சேர்க்கப்படுமென்று நம்புகிறேன்.

சென்னைநகரின், ஒவ்வொரு வட்டங்களிலுள்ள திராவிட இயக்கத் (ஜஸ்டிஸ் கட்சி) தோழர்கள், இன்றே சென்னை நகரத் திராவிடர் கழகக் காரியதரிசியிடமிருந்து இரசீதுப் புத்தகங்களைப்பெற்று பெருவாரியான உறுப்பினர்களைச் சேர்த்துக்கழகங்கள் அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு—வடஆற்காடு மாவட்டங்களிலும் உறுப்பினர்களைச்சேர்த்து, தாலுக்கா ஜில்லா கழகங்களை அமைக்க, சிலமுக்கிய இடங்களுக்குயான் நேரில் வந்து ஆங்காங்குள்ள பிரமுகர்களின் உதவியால் ஆவனசெய்ய முடிவுசெய்திருப்பதால், மேற்படி இருமாவட்டங்களிலுள்ள இயக்கத்தோழர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு ஆயிரக்கணக்கில் உறுப்பினர்களைச்சேர்க்கவேண்டுகிறேன்.

இங்ஙனம்,

T. சண்முகம்.

---

## திராவிட கழகம்,
### புதுப்பேட்டை.

2—10—44 பண்ணுருட்டி புதுப்பேட்டையில் தோழர்கள் N. கோவிந்தசாமி செட்டியார் காப்பாளராகவும் A. R. C. இராமலிங்கம் செட்டியார் தலைவராகவும், V. வைத்யலிங்கம் செயலாளராகவும்கொண்ட திராவிடர் கழகம் தோழர் L. N. T. துரைசாமி செட்டியார் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

---

## பெரியார் பிறந்தநாள் கொண்டாட்டம்

25—9—44 செங்கம் தாலுக்கா சீ. சோர்பனந்தலில் திராவிடர் கழகத்தின் சார்பாக சீ. வே. சுப்பு நாயுடு தலைமையில் பெரியார் 66-வது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

# வாரீர், வகுத்தவழிநடப்பீர்!

தில்லைத் தமிழ்ப்புலவர், நா மு. மாணிக்கம்.

தோழர்களே!

ஒண்ட வந்த ஆரியருக்கு உயர்விடம்தந்து அவரின் தலைநகராய் விளங்குவது, சோழமண்டலம். மலையிலே தலையைவைத்துக் கடலிலே கால்நீட்டும் காவிரியாற்றின் இருமருங்கும் வளஞ்சூழ்ந்த கழனியெலாம், வஞ்சக ஆரியரின் வளத்தைப் பெருக்கும் வயல்களாகமாறியன. மதத்திலே அழுந்தி மதியை அடகுவைத்தமக்களும்-மன்னரும் மதம்பிடித்த ஆரியர்க்கு வருடந்தவறாமல், மாதந்தவறாமல், நாள்தவறாமல், வரிகொடுக்கும் குடிமக்களாயினர். பேதம் வளர்க்கும்பெரும் புராணங்களும், சாதிச்சண்டை பெருக்கும் தக்க இதிகாசங்களும், தண்ணீரில் பட்டும் படாமலும் முளைக்கும்தர்ப்பைப் புல்லும்சண்டித்தனமிக்கஆரியர்க்குத்தக்க படைக் கலங்களாக அமைந்தன. விபசாரத்தைப் பெருக்கி வீணரை வளர்க்கும் ஆலயங்களெல்லாம், ஆரியரின் கோட்டை கொத்தளங்களாக, ஆரியரின் நன்மைக்கு வகுத்த அரண்களாக விளங்குவதை இற்றை நாள் காணுகின்றோம். இத்தகைய கோட்டைகள், அரண்கள் அம்மம்ம! சோழமண்டலத்தில் எத்தனை! இவை எல்லாவற்றுள்ளும் திராவிடரின் மதியை யழித்துமடைமையைப் புகுத்த "மாகினட்" அரண்போன்றது சிதம்பரத் திருத்தலம். இத்திருத்தலத்திலே எம்பெருமான்-நடராசப்பெருமான் இமையமலையிலிருந்து மிழிந்து போந்து இம்மாநிலமியங்க இடைவிடாது நடனமாடுகின்றார் என்று இயம்புகின்றனர் எனது இன்பத் தமிழரில் ஒருசாரார். தூக்கிய திருவடியைக் காணுகின்ற காட்சியே துலங்கும் நடனமாகக் காட்சியளிக்கின்ற தென்னின் அதுதூயமனத்திலேதோன்ற வேண்டிய தெளிந்த சிந்தனையா? அன்றி வெறியினை ஊட்டவல்ல மதுவினைப்பருகிய காரணத்தால் குழம்பிய நெஞ்சோடு நோக்கிய மருண்ட பார்வையா? என்று நீங்கள் கேட்கலாகாது, கேட்பின் கண்கள் சிவக்க, மெய்பதற நாக்குழற இம் என்ற ஒலியோடு எழுகின்ற வெகுளிதான் மாற்றமாகும். அல்லது உம் என்று ஒலியோடு எழுகின்றநெட்டுயிர்ப்புத்தான் மாற்றமாகும்.

இறைவன் மன்றிலே ஆடுகின்றானோ? இல்லையோ? ஆனால், இறைவனைப் படைத்து இறைவனை ஆட்டி, ஏமாறுந் தமிழர்களை ஏமாற்றிவாழும் ஆரியம், இந்த நாளிலுங்கூட, இந்தத் திருத்தலத்திலே. இன்பக்களி நடனம் புரிகின்றது என்பதுமட்டும் உறுதி. இந்த நடனம் இந்த நாட்டு மக்களின் பொருளைச்சுரண்டிப், போகத்தைக் குலைத்து அறிவை அழித்து, அடுத்த உலகினை அல்லும் பகலும் எண்ணச்செய்து அலைத்து அரித்துவருகின்றது என்பதும் உறுதியாகும்.

மானமொன்றேநல் வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த மறவேந்தரின் வழிவந்த திராவிடத்திருநாட்டின் செந்தமிழ் வீரர்களே! சென்ற மாதத்தில் தோழர் அண்ணாதுரை அவர்கள் வாரீர்!வாரீர்!என அழைத்தார், அன்போடு உரிமையோடு, சொல்லுஞ்செயலும், வெல்லும் வகையுடையதாக உம்மிடம் அமைந்திருக்கின்றது என்ற நம்பிக்கையோடு. செயலாற்றும் சிங்கங்கள் உள்ளனர், என்ற பூரிப்போடு, வாரீர்! விரைந்து, சேரீர் ஒன்றாகச் சேலநகரில் என்று முழக்கினார். முழவொலி கேட்டு, முறுக்கேறிய நரம்போடு தொடைதட்டித் தோள்புடைத்து, தலைநிமிர்ந்து பரணிபாடினீர், அதனை எண்ணுங்கள். இந்நாட்டின்எல்லாப்பகுதிகளிலும், மூலைமுடுக்குகளிலிருந்தும், சிற்றூர் தவறாமல் பதினாயிரக் கணக்கில்சேர்ந்து குழுமிய நீங்கள் செய்த வீரஒலி-வீரகர்ச்சனை என்ன?நாம்யார்? நம்முடையநாடு எது? அதன் எல்லைகள் எவை? அதன் பெருமைகள் யாவை? இப்பொழுதுநாமடைந்த சிறுமைகள் யாவை என்பனவற்றைத் தெளிந்த மனத்தோடு நீங்கள் சிந்தித்துச்செய்த முடிவுகள் யாவை? அடுத்த ஆண்டிலே உங்களுக்கு ஆக்கத்தை உண்டுபண்ணவல்ல அறிவுமிக்க தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுவது உங்கள் வேலை. இந்த ஆண்டுதான் என்னுடைய இறுதித்தலைமைச் சொற்பொழிவு என நமது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய பகுத்தறிவுத் தலைவர் பண்புமிக்க வேந்தர் பெரியார் அவர்கள். மனமொடிந்து அன்பின்பெருக்கால் கண்ணீர் வழியத்தன் அகத்தைத் திறந்து காட்டிய நேரத்தில், அஞ்சாதீர்கள், நாங்கள் உள்ளோம், கலங்காதீர்கள், கட்டளையிடுங்கள், வெற்றியே கொணர்வோம். எங்களிற் சில ஈனர்கள் இருக்கலாம். அவர்களின் தொகையோ விரல்விட்டு எண்ணற்கெளிது! இளமை உள்ளம் படைத்தவீரஇளைஞரானஎங்களைப்பெரிதாக மதியுங்கள், என ஆக்கமும் ஊக்கமும் ஊட்டிய வகையில் நீங்கள் செய்த தீர்மானங்கள் யாவை?

வாழ்கின்றார் நாற்பதுகோடி மக்கள் என்றால் சூழ்கின்றபேதமும் அந்தத் தொகையிருக்கும், இந்த ஊளைச் சேற்றை—ஏறுதஆழத்தை எவ்வாறாவது தூர்த்து, ஆறுகோடி மக்களான அருமைத் திராவிடரை ஓரினப்படுத்துதற்குத் தடையாக உள்ளனவற்றைத் தவிடுபொடியாக்குவதே சரியென்றுணர்ந்த நீங்கள், சாதிபேதம் குறித்து என்ன செய்தீர்கள்? பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்! பேதத்தை நாங்கள் ஏற்க மாட்டோம்! அரசியல் விதிகளையும் மாற்றுவோம்!அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்வோம்! என்று துணிந்த நீங்கள், "வர்ணாசிரமம் என்கின்ற கொள்கையையும் அதன்பேரால் ஏற்படுத்தப்பட்ட பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் பஞ்சமன் என்கின்ற பிரிவையும் இக்கழகம் ஒப்புக்கொள்வதில்லை என்பதோடு அக்கொளகைகள்எந்த [illegible]றையிருந்தாலும் ஒழிக்கப்படவேண்டியவைகள் என்று, இம்மாநாடு தீர்மானிக்கின்றது" என்ற தீர்மானவடிவிலே இயம்பினீர், ஏகமனதாக உங்கள் உள்ளொலியை. அந்த உள்ளொலி ஆரியக்கோட்டையிலே தாக்கி, அதன் எதிரொலியாக, அகில இந்திய வர்ணாசிரம சுயராஜ்ய சங்க மாநாடு என்றபேரால் ஒலிக்கின்றது என்பதனை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இந்த எதிரொலி வர்ணாசிரமத்தின் போர்முரசொலியா? அல்லது—சாப்பறையொலியா? என்பதனை உங்கள் சிந்தனைக்கு விட்டுவிடுகிறேன்.

அக்டோபர்மாதம் 8-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை அண்டங்களுக்கெல்லாம் நடுநாயகமாகவும் உந்திச் சுழியாகவும் அமைந்து தேன் சுரக்கப்பேசித் திராவிடத்தைத் தின்னுதற்கு வான்சுரரை விட்டுவந்த பூசுரரும் வாழும்படியான திருத்தில்லையம்பதியிலே, திருஆயிரக்கால் மண்டபத்திலே, வர்ணாசிரம மாநாட்டிற்குப் பாசறைக்களம் அமைக்கப்படுகின்றதாம். நாகபுரி டாக்டர் சதாசிவ மகாதேவபாரந்தே என்ற ஓய்வுபெற்ற மாவட்ட நீதித்தலைவர், பாசறைத்தலைவராம். பாசறையைத்திறந்து வைப்பவர், சென்னை V. V. சீனிவாச ஐயங்கார் என்ற ஓய்வுபெற்ற உயர்நீதி மன்றத்தலைவராம். சனாதனக்கொடி (இதற்கும் ஒரு கொடியாம்) யைச் துவசாரோகணம் செய்பவர் ராவ் சாகேப், தர்மபூஷண தர்மவர்த்தகர். N. நடேசஅய்யராம். தங்க வெள்ளி விற்பனையாளர், சிதம்பரம் S. இரத்தினசாமி செட்டியார் வரவேற்புக்கழகத்தலைவராம். அம்பாபுரம் நாராயணசாமி ஐயர் செயலாளராம்.

இந்த வர்ணாசிரமப் போர்ப்பாசறையை வரவேற்பது யார்? செட்டியாரா?

(10-ம்பக்கம் பார்க்க)

# வருத்தவழிநடப்பீர்!

9-ம் பக்கத்தொடர்ச்சி

தமிழரா? என்ற வினாவை இப்பொழுது நீங்கள் வினவலாம். நம் திராவிடத்திருநாடு சிதறுண்டு சிதைந்து போனதற்குக் காரணத்தைச் சித்தரித்துக்காட்டும் வரலாற்றிலே தன்னலங் கருதித் தண்டமிழ் நாட்டைப் பொல்லார்க்காக்கிய புல்லர்கள் பலரை நீங்கள் காணலாம். வீழ்ச்சியுற்ற திராவிடம் மீட்சி யுறுவதற்கும், எழுச்சியுற்ற திராவிடம் இன்பம் எய்துதற்கும் தடைக்கல்லாக, மதவெறிகொண்டு மதியழிந்த தமிழர்களும், பொருள்வெறிகொண்டு பொய்யினை மெய்யாக்கும் புரோகித மனப்பான்மைபடைத்த புலவர் கூட்டங்களும், தன்னல வெறிகொண்டு தன்னினத்தைக் காட்டிக்கொடுக்கும் சண்டாளர்களும், இருக்கின்றார்கள்—இன்னும் ஒழியவில்லை—இருக்கின்றார்கள், என்று காட்டும் அறிகுறிதான் இந்த நிலைமை என்பதை நீங்கள் உணரலாம்.

பாசறையை வரவேற்கின்ற நிலைமட்டுமல்ல. இந்தப் பாசறைஇங்கு வளம்படத் திறமுற நிகழவேண்டுமென்ற ஆசையால், உழைப்பின் உயர்வறியாமல், உண்டு கொழுக்கும் தமிழ்ச் செல்வர்களின் பொருளும் துணைசெய்கின்றது என்பதனையும் நீங்கள் அறியவேண்டும்.

இந்த இழிநிலைதிராவிட இனத்தார்க்கு ஆகுமா? வர்ணாசிரமக் கொடும்பாவியைத் திராவிடர்கள் சுட்டெரிக்கவேண்டாமா? சிந்தைகளிக்கத் தீர்மானஞ் செய்த திராவிடத் தோழர்களே! சிறப்பாகத் தென்னாற்காடு, தஞ்சைமாவட்டத் தோழர்களே! நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்! உங்களின் மாறுபட்ட கருத்தை நியாயமான முறையில் சட்டத்திற்கடங்கிய வகையில் நீங்கள் ஒரு சேரத்திரண்டு, வர்ணாசிரமம் என்னும் கொடும்பாவிக்குக் கொள்ளிவைக்க வேண்டாமா? சேலம் செயலாற்றுங் காலம் என்று சொன்னாலுங்கூட, உண்மையிலேயே தில்லைதான் செயலாற்றுங் காலம் என்பதை உணரவேண்டாமா? ஆம். உங்கள் உணர்ச்சிக்கும் எழுச்சிக்கும் இது சோதனைக்காலந்தான்.

# திராவிடநாடு திராவிடர்க்கானால்!

கோ. சி. பெரியசாமிப் புலவர்.

யாங்கள் திராவிடர்கள், எங்கள் நாடு திராவிடநாடு, எங்கள் மொழி திராவிடமொழி, எங்கள் கலை திராவிடக்கலை, எங்கள் முன்னோராண்ட நாட்டை யாங்கள் உரிமையுடன் ஆள, எங்களிடம்விட்டு விலகுங்கள், என்றுகேட்பதுதான் திராவிட நாடு திராவிடர்க்காகவேண்டுமென்பது. இதனைக்கண்டு சாத்திரியார் காய்வானேன்? ஆளப்பிறந்த யாங்கள் ஆளப்படுவோராக என்றும் வாழவேண்டும் எனச் சாத்திரியார் எண்ணுகின்றாரா?

இந்நாட்டையாண்ட மக்கள் அடிமை மக்களாகப், பஞ்சை மக்களாக உள்ளமையாலன்றோ ஆடுமாடுகளை ஓட்டிக் கொண்டு இந்நாட்டிற்குப் பிழைக்கவந்த கூட்டத்தினருள் ஒருவராகிய சாத்திரியார், திராவிடநாட்டுப் பிரிவினை சிலர் மூளைக்குள் குடையும் என்கிறார். குஜராத்திபேசும் வணிகர் ஒருவருக்குத் தன் பெண்ணைக் கொடுத்து அவர்கள் சாத்திரப்படி, வருணாச்சிரம தருமங்கெட்ட ஐயங்கார் ஒருவர் "இந்நாட்டை ஆண்டால் யாங்கள் ஆளுவோம், இல்லையேல் துய்பாக்கியாளுய்" எனத்துணிந்து கூறினார். ஒரு ஐயங்காருக்கும், வெள்ளிநாப் புலவராகிய சாத்திரிக்கும் இவ்வளவு நெஞ்சழுத்தமும், துணிபும், தமிழரைத் தாழ்த்தி மேடையேறிப் பேசும் வன்மையும் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கே காணவியலும்! பிழைக்கவந்த இவர்கள் நம்மை எள்ளிப் பேசுகின்றனரே!

## யார் மூளைக்குள் எது குடையும்?

உரிமைபெற்ற திராவிடநாட்டு உணவு விடுதிகளில் "நாயும், பார்ப்பனர்களும் உள்ளே வரக்கூடாதென" யாங்கள் எழுதித், தொங்கவிடப்போகும் பலகையைச் சாத்திரியார் காண்பாரானால் அப்பலகை அவர் மூளைக்குள் குடைச்சலையுண்டாக்கலாம்.

வெள்ளைக்கார ஐ. சி. எஸ். அதிகாரி ஒருவர் "பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவிற்குச்செய்த நன்மைகளில் பொய்யைச் சட்ட பூர்வமாக்கியது ஒன்று" எனக் கூறிச்சென்றார், அவர் கூற்றின்வண்ணம் மனுஸ்மிருதி என்னும் பொய்நூலை வெள்ளைக்காரராகிய மெக்காலேயுக்குக் காட்டி அதன்படி சட்டம்இயற்றி நம்மை ஆரிய பாசிசமனுவின் மொழிப்படி ஆண்டுவரும் இக்கொடிய சட்டங்களையெல்லாம் உடைத்தெறிந்து அவ்மனுஸ்மிருதியை உரிமைபெற்ற திராவிடநாட்டில் யாங்கள் நெருப்பிலிட்டுக்கொளுத்தும் பொழுது அந்நெருப்பிலிருந்தெழும் புகை சாத்திரியார் மூக்கிற்குள் நுழைந்து, வேண்டுமேல், அவர் மூளைக்குள் குடைச்சலையுண்டாக்கலாம்.

உரிமைபெற்ற திராவிட நாட்டில், "நாட்டின் நிலப்பரப்பு முற்றிலும் திராவிட நாட்டின் அரசுக்கு உரித்தானது. நிலத்தை விற்கவோ மாற்றவோ தனிப்பட்டவர்கட்கு எவ்வித உரிமையுங் கிடையாது" என அறிவித்து எல்லா நிலங்களையும் முடக்கல் சட்டத்தின் கீழ் அகப்படுத்திப் பார்ப்பனர் அவர்கள்சாத்திரப்படி எவ்வித சொத்துக்கும் உரிமையுடையோரல்லர், இரண்டு நாளைக்கு மேல் பிராமணன் வீட்டில் உணவுவைத்துக்கொள்ளக்கூடாது என்று அவர்கள் சாத்திரம் கூறுகின்றமையால், அச்சாத்திரத்தைப் பொய்யாக்கி அவர்கள் பொருள் திரட்டியிருந்தால் அப்பொருளைப் பறிமுதல்செய்து, அவர்கள் பிள்ளைகளையெல்லாம் கல்லூரிகளினின்றும்நீக்கி, காயத்திரி மந்திரம் செபிக்கவும், வேதம் ஓதவும், விதிசெய்கின்ற காலையில் அச்சட்டம் வேண்டுமேல் சாத்திரியார் மூளைக்குள் குடைச்சலையுண்டாக்கலாம்.

இனி இது குறித்து விரித்தெழுதாமல் மேற்செல்வாம். ஆரியர்கள் உரிமைபெற்ற திராவிட நாட்டில் வாழவேண்டுமானால், திராவிட வல்லரசினிடம் உடன்பாடு (Permit) பெற்றுத்தான் இந்த நாட்டில் அவர்கள் வாழ இயலும் என்பதைச் சாத்திரியார் அறிவாராக!

இங்கிலாந்தில் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காகச் சிற்றசர்களின் அதிகாரத்தைப் பிடுங்கினாற்போலத் திராவிடப் பேரரசின் நலன் வேண்டி இந்நாட்டில் உள்ள, குறுநில மன்னர்கள் (சமீன்தார்கள்) பெருநிலக் கிழவர்கள் மடாதிபதிகள் முதலியோரிடமுள்ள நிலங்களையும் அறநிலைய உரிமைப்பொருள்களையும் பறிமுதல் செய்து அரசாங்கத்திற்கு உரிமை யாக்குவோம்.

இப்பொருள்களின் வருவாயைக் கொண்டு அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், இருப்பதுபோன்ற மிகப்பெரிய தொழிற்சாலைகளை நாட்டித், திராவிடநாட்டின் தொழில்வளத்தைப் பெருக்குவோம்.

உரிமைபெற்ற திராவிட நாட்டில்கட்சி வேறுபாடின்றி எல்லோரும் ஒருமுகமாக அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டியவர்களே. அரசாங்கப் போக்கிற்குத்தடைவிளைப்போர் சிறிதும் இரக்கங் காட்டப்படாமல் வீழ்த்தப் பெறுவர்.

## ஐந்தாம் படையினர் அழிக்கப்படுவர்

பிரெஞ்சு நாட்டில் பெட்டேயினும், லவாலும், பிறநாட்டார்க்குத் தம் நாட்டைக் காட்டிக்கெடுத்தாற்போலப், பின்லந்தில் குன்சினேனும் யுகோஸ்லாவியாவில் டிட்டோவும், போலந்தில் வாசிலேவ்ஸ்காவும் அவ்வந்நாட்டில் பிறநாட்டாட்சிக்கு உதவி புரிகின்றாற்போலத் திராவிட நாட்டில்,நாட்டைப் பிறருக்குக் காட்டிக்கொடுக்கும் ஐந்தாம் படைவேலை செய்வோர் இரக்கமின்றிச்சுட்டுக் கொல்லப்பெறுவர். தனிப்பட்டவர் தங்கள் விருப்பு வெறுப்புக்களை வெளியிட்டுரைக்க உரிமையளிக்கப்பெறுவர். சுதந்தி

(12-ம் பக்கம் பார்க்க)

# திராவிடரும்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு வந்தன வென்பதும், அந்நிலைவுக் கற்கோ, ஆரியர்கள் இந்நாட்டிற்கு வந்த பின்னர், சிவன் கோயில்களாக மாற்றப் பட்டனவென்பதும், அப்புலவர், 'சிவன்' என்ற பெயரால் எப்படி-ஏன் அழைக்கப்பட்டார் என்பதுமான உண்மைகள், பெரிய புராண ஆராய்ச்சி முதற்பாகத்தில் தக்கசான்றுகளுடன் விளக்கப்பட்டிருக்கிறது.

இங்ஙனமே, வைணவ மதமும், அதன் கடவுளான திருமால் வழிபாடும் வடநாட்டிலே, சடகோபர்—முனிபாணர்—யாவனுச்சாரி முதலியோரால் ஏற்படுத்தப்பட்டு, நம்போலும் மக்களினத்தாரில் ஒருவனாய் இருந்து இறந்துபோன 'இராமன்' என்னும் அயோத்தி மன்னனைக் கடவுளாகக்கொண்டு, இராமானுசர் என்பவரால் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டதென்பதும், எண்டுக்சருதற்பாலது. இவ்வாறே, புத்த—சமண மதங்கள் வடநாட்டிலிருந்தும்; கிறித்து மதம் ஆசியாவிலிருந்தும்; முகமதிய (ஸ்லாம்) மதம் அரபிநாட்டிலிருந்தும் கொண்டுவரப்பட்டுத் திராவிட நாட்டில் இறக்குமதி செய்யப்பட்டனவென்பது யாவரும் அறிந்ததே. ஆகையால், திராவிட மக்களுக்கென ஒரு மதமோ—கடவுளோ அவரைக் குறிக்கும் வேதாகமங்களோ பண்டைக்காலத்தில் இருந்ததில்லை என்பதும், அவையெல்லாம் காலக்கணக்கில் ஒவ்வொருவரால் கொண்டுவந்து, புகுத்தப்பட்டவை என்பதும் மறுக்கமுடியாத உண்மைகளாகும்.

இனி, இவ்வளவு காலமாக இக்கடவுள்கள் மக்களுக்குச் செய்த நன்மை என்ன என்பதையாவது யோசித்துப் பார்க்க வேண்டாமா? மக்களின் பசிக்கொடுமை நீங்கிற்று? கவலை ஒழிந்ததா? வறுமை மாறிற்று? கைலையில் காவ்வோடுவாழும் கடவுளையும்; வைகுந்தத்தில் வனிதையரோடு கூடி விளையாடும் கடவுளையும்; மக்கள் படைத்து வழிபட்டுக்கண்ட பலன் என்ன? அன்றியும், இச்சொல்லப்பட்ட கடவுளரின் திருவிறக்க (அவதார)ங்களான நாயன்மார்-ஆழ்வார்கள்-ஆகிய மதத்தலைவர்களால் மக்கள் அடைந்தபயன் என்ன? பசியும், பிணியும், வறுமையும், கவலையும் மக்கள்பால் இல்லா தொழிந்தனவா? அன்று தொட்டின்றுவரை இன்பதுன்பங்கள், மேடும் பள்ளமும்போல்இருந்து வருவதையே காண்கின்றோம். இங்ஙனம் இருப்பது இயற்கையின் பண்பென்று எழிலுடையார் கூறுகின்றனர். முயற்சித்தால் முடியாததொன்றில்லை என்று முயற்சிவோர் கூறுகின்றனர். இவ்வுண்மைகளை உணராதோரும், உணரவிரும்பாதாரும், இல்லாததும்—இருக்க முடியாததும்—வேண்டப்பட்டாததுமான ஒன்றை, இருக்கிறதென்றும் இருக்க முடியுமென்றும், வேண்டப்படுவதென்றும்கூறி வீணுக உலகை ஏமாற்றி வருகின்றனர். கடவுளைக் கண்டேன் என்றும், காணமுடியுமென்றும் கூறுகின்ற ஒருவன், அந்தக்கடவுளைக்கண்டு தனக்குத் தேவையானதைப் பெற்றுக்கொள்ளாமல், கடவுளைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கின்றவனிடம் போய்ப் பிச்சை கேட்கிறான். கடவுள் தன்மை இருந்தவாறு மிக நன்று! நன்று!! என்று அந்தப்பகுத்தறிவாளன் நகைத்து, அப்பிச்சைக்காரனுடைய வயிற்றுப் பசியை நீக்க வழியும், அறியாமைப் பசிக்கு ஆராய்ச்சியோடு கூடிய அறிவும் சொல்லிக்கொடுக்கிறான். கேட்டு அதன் நடப்பது அவன் கடமை.

இனி, மதநூலார் கூறும் கடவுள் இலக்கணப்படி, ஒரு கடவுள் எக்காலத்தும்—எவ்விதத்தும், எவ்விடத்தும் இருக்க முடியாதென்பதற்கு, இன்னுமொரு வலிய சான்று தருகிறேன். அதாவது, உலகிலுள்ள அசைபொருள்—அசையாப்பொருள் ஆகிய அனைத்தும், கடவுளின் ஆணை-அருள்—அன்பு-நினைப்பு—நோக்கு ஆகியவற்றால் உண்டாகி, இலங்கும் உயிர் உடல் அனைத்தும் ஈசன் கோயிலாகி, எல்லாப் பொருள்களையும் அந்த ஒரு கடவுளே இயக்கிக்கொண்டிருக்கிறார் என்பது, பொதுவாக எல்லா மதநூல்களுடையவும் முடிந்த முடிபான கொள்கையாகும். உலகத்தோற்ற முறையைக்கூறுமிடத்துப், பலதிறப்பட்ட வேறுபாடுகள் காணப்படினும், கடவுளுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பும், அவ்விரு வகைப்பட்டாரின் செயல்வேறுபாடுகளும் ஒருவிதமாகவே கூறப்பட்டுள்ளன. "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்ற கடவுட் கொள்கை எல்லா மதங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். எனவே, கடவுளுக்கும் உயிர்களுக்கும் பொதுவாகவுள்ள இவ்வடிப்படைக் கொள்கையை ஆதாரமாகவும், பகுத்தறிவைத் துணையாகவும் கொண்டு பார்க்கும்போதுதான், கடவுள் என்றஒருபொருள் எந்தவகையிலும் இருக்கமுடியாதென்ற நல்ல முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. எப்படி யென்றால், உலகிலுள்ள அனைத்தையும் இயக்குவது கடவுள் என்றால், இயக்குபவன் இன்னான் என்று இயங்குபவன் ஏன் அறிந்துகொள்ள முடிவதில்லை? அல்லது இயக்குகின்றஅந்தக்கடவுளாவது தன்னை இன்னான் என்று இயங்குபவனுக்கு ஏன் அறிவிப்பதில்லை? உதாரணமாக, ஒருவனுக்குப் பிறக்கும் ஒரு குழந்தைக்கு, கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற எண்ணம் அல்லது அறிகுறி ஏன் உண்டாவதில்லை? எல்லாம்வல்ல கடவுள், தன்னால் படைப்பிக்கப்படும் குழந்தைக்குத் தன்னை அறியும் தன்மையை அதன் பிறப்பிலேயேகொடுக்கமுடியவில்லை, அல்லதுகொடுப்பதில்லை என்றால், அந்தக்கடவுளுக்கு எல்லாம்வல்ல இயல்புயாங்ஙனம் பொருந்தும்? தனக்குப் பசியிருக்கிறதென்பதை அழுகையின் வாயிலாகப் பிறர்க்கு உணர்த்தும் ஆற்றல்பெற்ற ஒரு சின்னஞ் சிறுகுழந்தை, தன்னையும் தனக்குப் பசியையும் உண்டாக்கியவன் கடவுள்தான் என்பதை ஏன் உணரமுடிவதில்லை? உண்மையாகவேகடவுள்தன்மை அக்குழந்தையிடம் இருக்குமானால், அக்குழந்தை பிறர் சொல்லிக்கொடுக்காமலேயே கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளும். அங்ஙனமன்றிக், கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற செய்தியைப் பிறர்சொன்ன பின்னரே அக்குழந்தை தெரிந்துகொள்கின்றதென்றால், அக்கடவுட்செய்தி தெரிவிக்கப்படும்வரை, அக்குழந்தைக்கும், பிறரால் தெரிவிக்கப்பட்ட அந்தக் கடவுளுக்கும் எந்த விதமான தொடர்பும் இருந்திருக்க முடியாதன்றோ! உலகப்பொருள்களை, "இது இன்னது, இது இத்தன்மையது" என்று அவற்றை அறியாதானுக்கு அறிவிப்பது போல், கடவுளையும், "இவர் கடவுள், இத்தன்மையர்" என்று அறிவிப்பதென்றால், தோன்றி அழியும் உலகப்பொருள்களுக்கும், தோன்றா அழியாப் பொருளான கடவுளுக்கும் யாதாமொரு வேறுபாடோ-உயர்வு தாழ்வோ இருக்கமுடியுமா? அது, இந்துமதக் கடவுளாயினும் சரி, வேறு எந்தமதக் கடவுளாயினுஞ் சரி தமக்கும் பிறவுயிர்களுக்கும் தொடர்பில்லாத முறையில், தொடர்பை உண்டாக்குபவன் ஒருவனை வைத்துக்கொண்டு இருக்கிறதென்றால், அத்தகைய கடவுள், கடவுள் இலக்கணத்தைக்கூறும் வேதாகமங்களின்படி ஒப்புகொள்ள முடியாததாகும்.

இனி, "ஒன்றேகுலமும் ஒருவனே தேவனும்" என்றால், பற்றீசல்போன்ற பலகுலங்களும் பல கடவுளரும் இருப்பானேன்? ஒரு கடவுளே பல பெயர்களோடு வணங்கப்படுகிறார் என்றால், ஒரு கடவுள் இன்னொரு கடவுளோடு "நான் பெரியவன் நீ சிறியவன்" என்று சண்டையிட்டுக்கொள்வானேன்? ஒரு குலத்தவன் இன்னொரு குலத்தவனை "நான் உயர்ந்தவன் நீ தாழ்ந்தவன்என்று கூறிக் குலப்போர்நடத்திக் கொடுமை விளைப்பானேன்?

ஒரு அரசன், தனக்குக் கீழே பலசிற்றரசர்களை வைத்துத் தந்நாட்டை ஆளுவதுபோல, ஒரு முழுமுதற்பெருங் கடவுளும், தமக்குக் கீழே பல சிறுசிறு கடவுளரை வைத்து இவ்வுலகத்தை இயக்குகின்றதா? அங்ஙனமாயின், அக்கடவுளுக்கு முழுமுதற்றன்மையும், எல்லாம் வல்ல இயல்பும் உண்டென்று கற்பிப்பதன் பொருள் என்ன? இந்துமதத்திற் பேசப்படும் கடவுளுக்கு, இச்சொல்லப்பட்ட தன்மைகள் உண்மையாகவே இருக்குமானால் இந்நாவலந் தீவில் பல்வேறு

(12ம் பக்கம் பார்க்க)

## திராவிடரும்-கடவுளும்.

11-ம் பக்கத்தொடர்ச்சி

மதங்களும், அவற்றிற்குரிய பல்வேறு கடவுளரும் இருக்கக் காரணமில்லையே.

விருப்புவெறுப்பற்ற ஒரு கடவள், தன்னைப் பிறர் வணங்கவேண்டுமென்று விரும்புமா? தன்னை வணங்கியவர்களுக்குச் சிறப்பும் வணங்காதவர்களுக்குச் சிறவாமையும் கொடுக்குமா? அப்படித்தானென்றால், கைக்கூலி பெற்றுக்கொண்டு ஒரு காரியத்தை முடித்துக்கொடுப்பவனுக்கும் அந்தக்கடவுளுக்கும் உள்ளவேறுபாடு என்ன? என்று இதுவரைகூறிய சுருக்கமான இவ் உண்மைகளை உள்ளபடியே அறிவோடு ஆராய்ந்துபார்ப்பவர்க்கு, கடவுளின் தன்மை இப்படிப் பட்டதென்பதும், கடவுள் இல்லாமலேயே உலகில் வாழமுடியுமா முடியாதா என்பதும், திராவிட மக்களுக்குக் கடவுட்கொள்கை எப்படி—யாரால்—எந்தக்காலத்தில் உண்டானதென்பதும், கடவுளுக்கும் உயிர்களுக்கும் யாதாயினும் தொடர்பு இருக்கமுடியுமா என்பதும் எளிதில் விளங்குவதோடு, இயங்கும் உலகம் இயற்கையோடுஅமைந்துள்ளதென்ற உண்மையும் விளங்கும் என்ற காரணத்தால், இன்னும் இதுபற்றி விரித்தெழுதாமல் இந்த அளவோடுமுடிக்கிறேன்.

—

## திராவிடநாடு

(10-ம் பக்கத் தொடர்ச்சி.)

ரத்தையும் உரிமையையும் காப்பாற்றுதற்கு அத்தகு செயல்கள் அறச் செயலாகக் கருதப்படும். கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல்பைங் கூழ்களைகட்டதனோடு நேரன்றோ? இச்செயல்கட்கெல்லாம் அடிகோலத்தான், சேலம் மாநாட்டில் திராவிடர் கழகம்எனப் பெயரை மாற்றினர்.

### மாற்றத்தின் மாற்றேலி என்ன?

இந்நாட்டிற்குப் பெயர்எது? திராவிடநாடு, திராவிட நாட்டைத் திராவிடர்கள் ஆளவேண்டியவர்களா? இல்லையா? திராவிடநாடு திராவிடர்களுக்குச் சொந்தமானதா? இல்லையா? திராவிட நாட்டில் திராவிடர்கள்சுதந்தரமாகவாழவேண்டியவர்களா? இல்லையா? இவ்வினக்களுக்கு மறுமொழிதான் திராவிடர் கழகம்எனப் பெயரமைத்ததாம். இந்நாட்டிற்கு உரியோரல்லராகிய வேற்றுப்புலத்தார்வேண்டுமேல் இப்பெயரை வெறுக்கலாம். இந்நாட்டிற் பிறந்த திராவிடர் தமிழ்தான் திரிந்து திராவிட மாயிற்றென்றும், திராவிடம்தான் திரிந்து தமிழாயிற்றென்றும் ஒப்பிலக்கணம் கூறுதலை ஓதியுணர்ந்தவர்கள்; உணரவேண்டியவர்கள், பொருளறியாமல் பிதற்றுவானேன்?

## திராவிடநாட்டு மக்களுரிமை.

மனிதர்க்குத் தனி உரிமை எதுவும் இன்றி ஒவ்வொருவரும் "நாடு" என்பதிலேயே இரண்டறக் கலந்துவிடவேண்டுமென்பது திராவிட நாட்டாட்சியின் முதற்கொள்கையாகும். இக்கொள்கையின்படி மனிதன்வேறு, நாடுவேறு என்ற நிலைமைக்கே எதிர்காலத் திராவிட நாட்டாட்சியில் இடமில்லையாம். ஒவ்வொரு மனிதனும் அவன் வாழும் நாட்டின் ஒரு சிறு உறுப்பாக மாத்திரம் கருதப்படுவான். மனிதவுரிமைகட்கும் சுயேச்சைக்கும் இவ்வாட்சியில் இடமில்லை. ஒருவன் திராவிட நாட்டில் வாழ்வதற்கு இடங்கொடுப்பதெல்லாம் நாட்டுவாழ்க்கைக்கு, அல்லாதவது நாட்டின் உயர்ச்சிக்கு அவன் உதவி புரிகின்றான் என்பதற்காகவேயன்றி மனிதர் வாழ்க்கைக்காக நாடு என்பதற்கன்று. இக்கொள்கை மக்கட்டலைமை (ஜனநாயகக்) கொள்கை முதலியவற்றிற்கு முற்றிலும் மாறுபாடுடையதாகத் தோன்றினும், பலசாதி, பல கொள்கைகளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் பின்பற்றி எத்துணையோ நூற்றாண்டுகளாக வாழ்க்கையை நடத்திப் பழகியுள்ள ஒரு கூட்டத்தினரைத்திருத்தி நாகரிக மக்களாகத்திகழச்செய்யவேண்டுமேல், இத்தகுகொள்கைகளைப் பின்பற்றினாலன்றி யாம் நம் நாட்டாட்சியை வன்மை வாய்ந்த வல்லரசாட்சியாக்க இயலுமா?

உரிமைபெற்ற திராவிடநாட்டில் ஆளுவோரும், ஆளப்படுவோருமாகிய இரு பகுதியினரன்றிப் பிறகட்சிகளுக்கு இடமில்லை யாம். யாம் கூறும்கூற்றிற்கு ஆதாரமாக அட்லாண்டிக் சாசனத்தின் மூன்றுவதுவிதிஅமைந்துள்ளது. தங்கட்குத் தேவையான சர்க்காரையமைத்துக்கொள்ள மக்களுக்குள்ள உரிமையை அட்லாண்டிக் சாசனத்தின் மூன்றுவதுவிதி ஒப்புக்கொண்டிருக்கிறது.

## படையெடுப்பும், பாதுகாப்பும்.

பிறநாட்டினர் திராவிட நாட்டின்மீது படையெடுத்தால் அப்படையெடுப்பைத் தடுத்தற்கும், நாட்டைப் பாதுகாத்தற்கும், எங்கள் இராணுவ பலத்தையே யாங்கள் நம்பிவாழ்தற்கும் ஒருகோடி திராவிட வாலிபர்கட்கு இராணுவப் பயிற்சி, போர்ப்பயிற்சியளித்து நவீன கருவிகளை உபயோகப்படுத்தும் முறைகளையும் அவர்கட்கறிவித்து அவர்களைப் பிறநாட்டு இராணுவத்தினர் பார்த்துப் பொறாமைகொள்ளத்தகுந்த அத்துணை வலிபடைத்த—இராணுவப் பயிற்சி முற்றிய போர் வீரர்களாகத் திகழச்செய்வோம். 1940ல் நூறு (100) போர் முனைப் பீரங்கிகளையும், இருபது (20) டாங்கிகளையும் தனக்குக் கருவியாகப் பெற்று ஏனையபோர்க்கருவி இல்லாமல் தங்கள் ஆகாயப் படைகளையும் ஹிட்லர் அடித்துத்தள்ளிவிடுவானோவென நடுங்கிக்கொண்டிருந்த பிரித்தன் இவ்வளவு போர்க்கருவிகளையும் அமெரிக்காவின் பேருதவிபெற்றுத் தானும் உழைத்து உண்டாக்கிக்கொண்டு இன்று ஹிட்லரையே புறமுதுகிட்டோடச் செய்கின்றதென்றால், யாம் போர்க்கருவிகளைப் பிறநாட்டு அரசாங்கத்தாரோடு ஒப்பந்தஞ் செய்துகொண்டு பெருக்கிக்கொள்ளல் சாலாதோ? (தொடரும்.)

—

## திராவிடர் கழகம்

வண்ணாரப்பேட்டை.

சென்னை வண்ணாரப்பேட்டை தனலட்சுமி பாடசாலையில் 1—10—44காலை 10-மணிக்குத் தோழர் திருவொற்றியூர் T. சண்முகம் அவர்கள் தலைமையில் நடந்த ஷை கழக ஆலோசனைக் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## திராவிடர் கழக அமைப்புக் கூட்டம்.

சேலம் மாநாட்டுத்தீர்மானத்தைஅனுசரித்து மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் திராவிடர் கழகங்களை அபிவிருத்திசெய்யவும், அமைக்கவும் நாளது அக்டோபர் மாதம் 22ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு மதுரையில் எனது இல்லத்தில் ஒரு ஆரம்பக்கூட்டம் நடைபெறும். திராவிடர் கழகத்தில் ஆர்வமுள்ளவர்கள்எல்லோரும்இதையேஅழைப்பாகக்கொண்டு வந்துசேரக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

W. P. A. சௌந்தரபாண்டியன்.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.